
www.tamilarangam.net

தேடல் - 5
1990

# தேடல்

# THEDAL



கலை இலக்கிய மன்ற (கனடா) வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேடல்

கனடா
கலை இலக்கிய மன்ற
வெளியீடு





THEDAL

P.O. BOX 1031
STATION 'F'
TORONTO, M4Y-2T7
ONTARIO, CANADA.

இவ்விதழ் (தேடல் - 5)
மொன்றியால் நகரிலிருந்து
வெளியிடப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





- இன்றைய தீர்வுகளும், தேவைகளும் ... ஆசிரியர் குழு 2
- கியூபெக் ... க. சித்தாமன் 6
- நம்பிக்கை ... ஆனந்த் பிரசாத் 7
- தேசிய இனப் பிரச்சனையும் முஸ்லிம் மக்களும் ... வ.ஐ.ச. ஜெயபாலன் 9
- அஞ்சலிகளின் அஞ்சலி ... ரமேஷ் 16
- ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து ... செழியன் 20
- இலங்கையின் பத்திரிகை ஆரம்பம் ... மூர்த்தி 23
- அப்பாக்கள் ... அமலா 26
- சுற்றுடல் பாதுகாப்பு ... ஜெ. கண்ணம்மா 28
- ஒரு பேனாவின் பெருமூச்சு ... கே. பாலகரன் 30
- கனிவுமில்லை கருணையுமில்லை ... சி. சிவசேகரம் 32
- கடலுடன் மோதும் கல்லறைகள் ... சர்வா 40
- எல்லை தாண்டா அகதிகள் ... மாத்துலே சோமு 45
- தொலைக்காட்சி ஒரு நோக்கு ... ரதன் 55
- அண்டவெளியில் ஒரு தேடல் ... கிறிஸ்டி குரு 58


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது தாய்நாட்டின் நிகழ்வுகள்
போராட்டவரலாற்றில் நெழிவுகளேயும்,
சுழிவுகளேயும் ஏற்படுத்தி போராட்டத்திலிருந்தும்
சமூகத்திலிருந்தும் கருத்தூரத்துச் செய்யப்பட்டு
ஒருமையில்லாத எதேச்சையான தீர்வு முறைகளை
உருவாக்கி மனிதமனங்களை விரக்தியுறச்
செய்ததோடு மக்களின் தேவைகளை எள்ளனவேனும்
தீர்பதாக இல்லை. இதற்கான காரணம்
தலைமைத்துவத்தை வகிக்கும் தனிமனிதர்களது
ஏகபோக இரவல் இனவாதச்சிந்தனையே! இதற்கு எம்
சமூகஅமைப்பும் பெரும்பங்கு வகிக்கிறது என்பது
மறுக்கமுடியாது.

எமது போராட்டம் ஒரு சில குழுக்களின்
போட்டா போட்டிகளாக இல்லாமல் அது மக்களின்,
அரசியல் மாற்ற மேம்பாட்டிற்கான போராட்டமாக
மாற்றப்படவேண்டும். ஒரு கூட்டு
மனிதர்களினுலேயே ஒரு வரலாற்றுச்சம்பவத்தை
நிகழ்த்த முடியும். இதற்கு பல தரப்பட்ட
இலக்குகளோடு பல்வேறு குழுக்களாகச்
சிதறிப்போய்க்கிடக்கும் மனிதமனங்களை

www.tamilarangam.net

# இன்றைய தீர்வுகளும் தேவைகளும்

ஒரு பொதுவான பார்வையின் அடிப்படையில் ஒரு நோக்கத்தோடு கலாச்சார சமூக மாற்றமேம்பாடுகளைப் பெறுவதே இன்றைய தேவைகளாகும். இதற்கு மாறாக பிரச்சனைகளைக் குறுகிய எல்லைகளில் நிலை நிறுத்துவது நசுக்கப்படும் மக்களின் விடுதலைக்கான வழிமுறையாக கருதத்தக்கதல்ல.

போராட்டம் மக்களுக்கானதே! போராடும் குழுக்களும் மக்களுக்கானதே!இதைவிடுத்து தத்தமது விருப்பு வெறுப்புகளை நிறைவு செய்வதாகவல்ல விடுதலையமைப்புகள் ஒரு புறச்சக்தியாக இருந்து மக்களை நசுக்காது அவர்களை உமிழ்ந்து செயலிழக்கச்செய்யாது பண்புசார் அரசியல்வடிவத்தை உருவாக்கி புதிய முன்னெடுப்புகளின் மூலமாகத் திகழவேண்டும். பழைய அமைப்புவிதிகளைக் கண்மூடித்தனமாக அமுல்படுத்தாது புது விதிகள் செய்யவேண்டும்.

**"நாம் மாறுவிட்டாலும் வரலாறு எம்மை மாற்றவே செய்யும்."**

**- ஆசிரியர் குழு**

www.tamilarangam.net

**இந்த "தேடல்" இதழ்
கனடாவின் கியூபெக் மாநிலத்தின்
மொன்றியல் நகரிலிருந்து வெளிவருகிறது.**

# கியூபெக்

**கி**யூபெக் மாநிலம் கனடாவின் ஒரு தனித்துவமான மாநிலமாகும். பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் இம் மாநிலத்தில் பிரெஞ்சு மொழிப் பாதுகாப்பு என்பது உள்ளூர் அரசியலின் ஜீவகோஷமாகும். கனடாவின் உத்தியோகபூர்வ மொழிகளாக ஆங்கிலமும், பிரெஞ்சும் அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதும், கனடாவின் இரு மொழிக்கொள்கை அமுலாக்கலிலிருந்து கியூபெக் மாநிலம் விலகி இன்றுவரை பிரெஞ்சுமொழி, பிரெஞ்சு கலாச்சாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் விதத்தில் பல சட்டங்களை இயற்றியுள்ளது - இயற்றிவருகிறது. இது கியூபெக்கில் வாழும் ஆங்கில மக்களின் அதிருப்தியை மட்டுமல்லாது மற்றைய மாநிலங்களிலும் கணிசமான கசப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் கனடாவின் சிறுபான்மை

**க.சிந்துராமன்**

---

*கியூபெக் மாநிலத்தின் மொத்தப் பரப்பளவு 1540 680 சதுர மீட்டர் தலைநகர்: கியூபெக் (QUEBEC CITY)மொத்த ஜனத்தொகை சுமார் 6 619 000. இதில் பிரெஞ்ச் மக்கள் 81%, ஆங்கிலேயர் 9%, இத்தாலியர் 2% ஆகும்.*

*கியூபெக் - மொன்ரியாலில் ஆறு ஈழத்தமிழர் அமைப்புகள் இயங்குகின்றன. அவை, கலை இலக்கிய மன்றம், கியூபெக் ஈழத்தமிழர் ஒன்றியம், தமிழர் ஒளி நிலையம், கியூபெக் சைவ மகாசபை, உலகத்தமிழர் இயக்கம், கனடா தமிழ் கலாச்சாரச் சங்கம் என்பனவாகும்.*

www.tamilarangam.net

பிரெஞ்சுக்கலாச்சாரத்தைப் பாதுகாக்க இத்தகைய சட்டங்கள் மிக அவசியமென பெரும்பான்மை கியூபெக் மக்கள் கருதுகிறார்கள்.

பல நூற்றாண்டுகாலமாகவே பிரெஞ்சு, ஆங்கில மோதல்கள், கசப்புணர்வுகள் இருந்துவந்திருக்கிறதெனினும், 1960க்களிலிருந்து வளர்ந்து வரும் கியூபெக் மாநிலத்தின் தனிநாட்டுக் கோரிக்கையும் அதைத்தொடர்ந்த நிகழ்வுகளும் கனடியச் சரித்திரத்தின் பதட்டமான பக்கங்களாகும். 1960 பதுக்களின் பிற்பகுதியில் நாமே நமக்கு எஜமானர்கள். (Maitres chez nous) என்ற கோஷத்துடன் பிரெஞ்சுத் தேசியவாதம், பிரிவினைவாதமாக வளர ஆரம்பித்தது. அப்போதைய பிரதமமந்திரியான லெஸ்டர் .பீ. பேர்ஷன் கொணர்ந்த இரு மொழிக்கலாச்சார அமுலாக்கல் சட்டங்களும் இத்தேசியவாதத்தை மேன்மேலும் வளர்க்கவே உதவியன.

1969 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உத்தியோகபூர்வ மொழிச்சட்டம் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரண்டு மொழிகளும் கனடா முழுவதும் உத்தியோகபூர்வ மொழிகளாக இருக்கவேண்டுமென பிரகடனப்படுத்தியது. இதைத்தொடர்ந்து கியூபெக் மாநிலத்தில் தீவிரவாதப் போராட்டக் குழுக்கள் தோன்ற ஆரம்பித்தன.

தீவிரவாதக் குழுவான F.L.Q கியூபெக் விடுதலைமுன்னணி 1970 ம் ஆண்டு கியூபெக்கின் அமைச்சரான பியர் லபோட்டினை கடத்தி கொலை செய்ததும், பிரித்தானிய வர்த்தக கமிஷனரான ஜேம்ஸ் க்ரோஸை கடத்தியதும் அப்போதைய பிரதம மந்திரி பியர் ட்ரூடோவை வெகுளச் செய்தன. யுத்தகால சட்டங்களை பிரகடனப்படுத்தியே கியூபெக் தீவிரவாதிகளை ஒடுக்கினார் ட்ரூடோ.

தீவிரவாத நடவடிக்கைகள் ஓய்ந்தபோதிலும், கியூபெக் தனிநாடாக வேண்டும் என்ற அரசியல் போராட்டம் ஓயவில்லை. 1976 இல் பிரிவினைவாதக் கட்சியான "பார்டி கியூபெக்குவா" கியூபெக் மாநில அரசை பெரும் வெற்றியுடன் கைப்பற்றியது. இதன் தொடர்ச்சியாக கியூபெக் கனடாவின் இணைப்பில் இருந்து பிரிய வேண்டும் என்ற கோசம் கியூபெக் முழுவதும் பலமாக எழுந்தது. பல்வேறு கோணங்களில் அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவாதங்கள் பிரிவினையையொட்டி ஏற்பட்டன. அரசியல் ஸ்திரமற்றநிலை உருவாகும் தோற்றப்பாடு தோன்ற, பணவீக்கம் போன்ற பொருளாதார ஆட்டங்கள் கியூபெக் மாநிலத்தின் பிரிவினையைக் காரணம் காட்டி ஏற்படுத்தப்பட்டன. பிரதமர் ட்ரூடோ பிரிவினைக்கு எதிரான பலமான பிரச்சாரத்தை ஆரம்பித்தார். பலனாக கியூபெக் பிரிவதையொட்டி 1980 ஆம் ஆண்டு மே 22 எடுக்கப்பட்ட வாக்கெடுப்பில் பெரும்பான்மையோர் கியூபெக் பிரிவதை எதிர்த்து வாக்களித்தனர். பார்டி கியூபெக்குவா தலைவர் ரெனி லவாக் "அடுத்தமுறை..." எனச் சொல்லி தனி நாட்டு கோரிக்கையை அப்போதைக்கு நிறுத்தி வைத்தார். அன்றிலிருந்து கனடாவில் கியூபெக் அங்கம் வகிக்கினும் தனிநாட்டு கோரிக்கை நீறுபூத்த நெருப்பாக மாறியது. பிரதிபலிப்பாக பிரெஞ்ச் மொழியில் மட்டும் அமைந்த விளம்பரப் பலகைகளையே கியூபெக்கில் பொருத்த வேண்டும் என்பது போன்ற பல சட்டங்களை கியூபெக் மாநில அரசு பல்வேறு எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது நிறைவேற்றியது. மேலும் கல்வி, வேலைவாய்ப்புக்கள் என்பவற்றில் பிரெஞ்ச் மொழிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. கனடாவின் அரசியல் சாசன மாற்றத்திற்கு ஒப்புதல் அளிக்காது மறுதலித்தது. கியூபெக்கின் ஆங்கில மொழிபேசும் மக்கள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக மனித உரிமைகள் கமிஷனுக்கு முறையிடுமளவிற்கு கியூபெக் அரசின் "மொழிப் பாதுகாப்பு" நடவடிக்கைகள் இன்றுவரை தொடர்கின்றன.

இவ்வகை நடவடிக்கைகள் கியூபெக்கில் தொடரும் அதே சமயத்தில் கனடா மத்திய அரசு கியூபெக்கை சமாதானப்படுத்தும் முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது. பொருளாதார ரீதியில் கியூபெக்கை புறக்கணிக்காத வகையில் பல தொழில் கேந்திரங்கள் கியூபெக்கில் மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டன. கியூபெக்கால் நிராகரிக்கப்பட்ட கனடாவின் அரசியல் சாசனத்திற்கு ஒப்புதல் பெறும்வகையில் பிரதம மந்திரி பிரையின் மல்ரோனியும் கனடாவின் பத்து மாநில முதல்வர்களும் 1987 ஏப்ரலில் கூடி கியூபெக்கை ஒரு தனித்துவமான சமுகமாக அங்கீகரிக்கும் வகையில் அமைந்த "மீச்லேக்" ஒப்பந்தத்தை வடிவமைத்தனர். இவ் ஒப்பந்தமானது ஏகமனதாக நிறைவேற்றப்பட இயலாதவாறு அரசியல் சாசன விவாதங்கள் தொடர்கின்றன. இதனால்தான் தற்போது மீண்டும் கியூபெக் தனிநாட்டுக் கோரிக்கை தோன்றித் தொடர்கின்றது.

www.tamilarangam.net

ஆனந்த் பிரசாத் —

# நம்பிக்கை

இந்த வாழ்க்கைக்கு
இருப்புத்தான் அடிநாதம்
நான் சுமந்து திரிகின்ற
வினாக்குறிகளெல்லாம்
கடிகார முட்களில்
தொங்கிச் சுழல்கிறது.

காலம் பதில் சொல்லும்!
காலம் பதில் சொல்லும்!
இந்த வாழ்க்கைக்கும்
இருப்புத்தான் அடிநாதம்.

விடைகள் கிடைக்காமல்
விகாரமாய்ப் போனவர்கள் —
விகாரம் தவிர்க்கவென
விசாலமாய்ப் பார்த்தவர்கள் —
விசாலமாய்ப் பார்த்ததனால்
விலாசம் தொலைந்தவர்கள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நல்ல மனிதரெல்லாம்
கேள்விக் குறிகளுக்குள்
குறிகிக் குனியாது
குடும்பச் சட்டிக்குள்
குதிரையோடப் போனார்கள்.

மரணத்தில் வாழ்ந்த சிலர்
மௌனத்தில் வாழ்ந்த சிலர்
மௌனம் மரணித்து
மயக்கத்தில் வாழம் பலர்.

எல்லாப் பொழுதினிலும்
இந்த உலகின்
எங்கோ ஒரு மூலையில்
உரத்த குரலெடுத்து
எவனோ ஒருவன்
மனித சுதந்திரத்தை
வலியுறுத்திக் கொண்டேயிருப்பான்!



www.tamilarangam.net



# தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லீம் மக்களும்

வ.ஐ.ச.ஜெயபாலன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**20**ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவான இலங்கைத் தேசியவாதம், தனது ஆரம்ப தசாப்தங்களிலேயே இனரீதியாப் பிளவுபட ஆரம்பித்தது.

இப்பிளவு, 1870களில் முதன்மை பெறத் தொடங்கிய சிங்கள பௌத்த மறுமலரச்சி இயக்கம் அனைத்து இலங்கைத் தேசியவாதத்தில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கிய அதன் தலையாய போக்காக இந்திய விரோத, முஸலீம் விரோதத் தன்மைகளுடன் வளரத் தொடங்கியதால், உருவாகியது.

இந்தியாவில் தோன்றியது போல நாடு முழுவதுமுள்ள சந்தை' வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்ட சுதேசிய கைத்தொழில் முதலாளித்துவம் இலங்கையில் அமையவில்லை. பிரதேசமுதன்மைக்குப் போட்டியிடும் வர்க்க முதலாளித்துவத்தின் தோற்றத்தினதும், வளர்ச்சியினதும் அரசியல் வெளிப்பாடாகவே இலங்கைத் தேசியவாதத்தின் தோற்றமும், வளர்ச்சியும் அமைந்தன.

ஆரம்பத்தில் கொழும்பு நகரிலும் முதன்மைப்பட்ட சுதோசிய வர்த்தக முதலாளித்துவ எழுச்சியின்போது, மரபு சார்ந்து வரலாற்றுக்காலம் தொட்டு வர்த்தகத்துறையில் செல்வாக்குச் செலுத்திவந்த முஸ்லிம்கள் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தனர். இலங்கையின் முக்கிய வர்த்தகத்துறைகள் பிரிட்டிஷாரதும், இந்தியர்களதும், முஸ்லிம்களதும் கைகளில் இருந்தன.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் புதிதாக உருவாகிய வர்த்தக முதலாளிகளில் பெரும்பங்கினர், சிங்களவர்களாக அமைந்தனர். இக்காலகட்டத்தில கல்வி சார்ந்த மேலோர்களாகக் கொழும்பில் உயர் தொழில்களில் குவிந்த யாழ்ப்பாணத் தமிழர்களும், கொழும்பு சார்ந்து வர்த்தகத்துறையில் ஈடுபட ஆரம்பித்தனர்.

எழுச்சியுறும் சிங்கள வர்த்தக முதலாளித்துவம் சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கங்களூடாகத் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்த்தக நலன்களை முதன்மைப்படுத்த முனைந்த ஆரம்பகாலத்திலிருந்தே, சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தில் கத்தோலிக்க விரோத, முஸ்லிம் விரோத, இந்திய விரோதக் குழும்சங்களை அடையாளம் காணுதல் முடியும். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியர்களுடனும், முஸ்லிம் களுடனும் வர்த்தக நலன்களு க்காகப் போட்டியிட்ட சிங்கள வர்த்தக முதலாளித்துவத்தின் சமய,கலாச்சார அணியின் பிதாவான அநாகரீக தர்மபால (Anaagrika Dharm pala) அவர்கள் 1900 முதல் தசாப்தங்களில் இருந்தே தனது பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் இந்திய விரோத,முஸ்லிம் விரோதப் போக்கை வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

இக் காலகட்டங்களில், கொழும்ப, மாநகரின் வளர்ச்சியுடன் அங்கு உருவாகி வந்த யாழ்ப்பாணத்து மேலோர்களதும் வர்த்தக முதலாளிகளினதும் குழாம், தம்மை ஒத்த வர்க்ககுழும் சங்களை கொண்டிருந்த சிங்கள பௌத்தத் தலைமையுடன் இணைந்து முஸ்லிம்களையும் இந்தியத் தமிழர்களையும் காட்டிக் கொடுத்தேனும் தமது அபிலாசைகளை நிறைவு செய்யும் நோக்கங்களை வெளிப்படுத்தி வந்தது.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்நூற்றுண்டின் ஆரம்பத்திலுமாக இலங்கைத் தேசியவாதத்தின் தொடக்கக் கட்டத்திலேயே, இலங்கை வர்த்தக முதலாளித்துவத்தின் இன ரீதியான உள் போட்டிகள் தேசிய அரசியலில் புலரத் தொடங்கின.

இக்காலத்தில் கொழும்பு,. கண்டி நகர்களில் கூர்மை யடைந்து வந்த முஸ்லீம் விரோத உணர்வும், அதன் வெளிப்பாடான 1915 ம் ஆண்டின் சிங்கள முஸ்லீம் கலவரமும், இப் பின்னனியிலே புரிந்து கொள்ளப் படுதல் வேண்டும்.

சுதந்திரத்தின் பின்னர் மலையகத் தமிழர் மீதும், இலங்கைத் தமிழர் மீதும் தொடர்ச்சியாக இடம் பொற்ற இனவாத நடவடிக்கைகளில் காணப்பட்டது போலவே சிங்கள பௌத்த வர்த்தக முதலாளி த்துவம், அதன் அரசியல் வெளிப்பாடான சிங்களத் தேசியவாதமும், 1915 ம் ஆண்டு முஸ்லீம் கலவரத்தின் பின்னணியிலும் தலைமைப் பாத்திரம் வகித்தன!

முஸ்லீம் மக்களது தலைமை கொழும்புசார் வர்த்தக முதலாளித்துவத்தின் குறுகிய நலன்களை முதன்மைப்படுத்தும் போக்கைக் கொண்டதாகவே எப்போதும் இருந்து வந்துள்ளது. கொழும்பில் நிகழ்ந்த பொருளாதார வாய்ப்புக்களுக்கான தமிழ் முஸ்லீம் வர்த்தக முதலாளித்துவ போட்டிகளும், அதன் அரசியலும் தமிழருக்கும் முஸ்லீம்களுக்கும் இடையிலான பிளவுகளை, இந்நூற்றுண்டின் ஆரம்பக் காலங்களிலேயே வலுவடையச் செய்தது.

பின்னர், இன அரசியலில தமிழர் விரோதப் போக்கை சிங்கள பௌத்த அரசுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கொண்ட போது, முஸ்லீம் தலைமையின் ஒரு பகுதி, முன்னர் தமிழரது கொழும்புசார் தலைமை விளையாடிய சூதான அரசியல் விளையாட்டைத் தாமும் விளையாடத் தொடங்கியது.

தமிழர்களின் முதலாளித்துவத் தலைமையும், சிங்களவரின் முதலாளித்துவத் தலைமையும், 1950 களில் கிராமங்கள் சார்ந்து பரவலாகியதில் தம்முள் பிளவுபட்டன. முஸ்லீம்களது முதலாளித்துவத் தலைமைகள் கொழும்பில் மையப்பட்டே இருந்ததினால் இக்காலகட்டத்தில் அடிப்படை அரசியற் பிளவுகளுக்கு ஆளாகவில்லை.

முஸ்லீம்களின் தலைமை தமது சொந்த மக்களின் பலத்தில் தம்மை ஸ்தாபித்துக் கொள்வதற்குப் பதிலாக, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என பிளவு பட்ட சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் கட்சிகளின் பின் செல்வதன் மூலம் தமது சொந்த நலன்களைப் பேணமுற்பட்டது. 1915 ம் ஆண்டில் தமிழர் தலைமை முஸ்லீம்களைக் காட்டிக் கொடுத்ததைப் போல, 1948 லும் சொந்த நலன்களுக்காகக் கொழும்பில் மையப்பட்ட தமிழ்க் காங்கிரஸ் கட்சி, இந்தியத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்தமையால் உடைவு பட்டதில் தமிழர்க் கட்சி உருவாகியது.

சிங்களப் பேரினவாதத்திற்கும், தமிழரது பிரதேசங்களில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்களுக்கும் எதிரான பரவாலான தமிழ் மக்களது அபிலாசைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய

தமிழரசுக் கட்சி கிழக்கு மாகாணத்து முஸ்லீம் மக்களது ஆதரவைப் பெற்று தமிழ் பேசும் மக்களது ஐக்கியத்தைப் பேண முயற்சிகள் எடுத்தது. எனினும் தமிழர் முஸ்லீம்கள் மத்தியில் நிலவி வரும் பிளவுகளை வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் புரிந்து கொள்ளும் அறிவாற்றலும், வரலாற்று ரீதியான பிளவுகளைக் குறுகிய தமிழ் தேசியவாத நலன்களுக்கு விரோதமாக சென்று தீர்த்து வைக்கும் அர்ப்பணிப்பும் தமிழரசாரிடம் காணப்படவில்லை.

ஏனைய சமூகங்களுக்கெதிராக சிங்களத் தேசியவாதிகளுக்கும் அவர்களது அரசுகளுக்கும் துணைபோகும் சூதாட்டத்தை "அரசியல் தந்திரோபாயமாக" கொள்ளும் தற்கொலைப் போக்கை சுதந்திரத்தின் பின்னர் தமிழர் தலைமைகளிடமிருந்து முஸ்லீம் தலைமைகள் சுவீகரித்துக் கொண்டன.

முஸ்லீம் தலைவர்கள் கொழும்புக்கு வெளியில் தமது பாரம்பரியக் கிராமங்களில், பிரதேசங்களிலும் வாழும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பரவலாகி, பரந்துபட்ட முஸ்லிம் மக்களது நலன்களுக்குப் பொறுப்பாக இயங்காதமையால் தமது சொந்த நலன்களுக்குப் பரந்துபட்ட முஸ்லிம் மக்களது சமூக பிரதேச நலன்களைச் சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஐக்கியக் தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திக் கட்சி

www.tamilarangam.net

அரசுகளுக்குப் பலியிடும் அளவுக்குத் துணியவும், தாழ்ந்து போகவும் கூடியவர்களாக அமைந்தனர்.

1949ல் தமிழரசுக் கட்சியின் தோற்றத்துடன் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களிடையிலான ஐக்கியத்தைக் கட்டி எழுப்புவதற்கான மேல்மட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி ஐக்கியத்துக்கான முயற்சிகள் வெற்றி பெற்றிருக்குமேயானால், கிழக்கு மாகாணத்தில் நூற்றுக் கணக்கான சதுர மைல் பரப்புள்ள முஸ்லிம் மக்களதும் பாரம்பரியப் பிரதேசங்களை மாறிமாறிப் பதவியேற்ற ஐக்கிய தேசியக்கட்சி சிறீலங்கா சுதந்திரக் கடசி அரசுகளின் திட்மிட்ட குடியேற்ற நடவடிக்கைகளில் இருந்து பாதுகாத்திருத்தல் சாத்தியப்பட்டிருக்கலாம்.

தமிழரசுக் கட்சியின் நியமனம் பெற்றோ அல்லது ஆதரவு பெற்றே, நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்ற கிழக்கு மாகாண முஸலிம் தலைவர்கள் பலரும், பின்னர் அவ்வப்போது ஆளும் கட்சிகளாக இருந்த ஐக்கிள தேசியக் கட்சிக்கோ,அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ தாவத் தொடங்கினர்.

இத்தகைய ஆளும் கட்சித் தாவுதல்களுக்குத் தரகர் வேலை செய்து, தமது நலன்களைப் பாதுகாத்துக் கொண்டது கொழும்புசார் முஸ்லிம் வர்த்தக முதலாளித்துவம்.

மத்தியதர வர்க்கத்தின் கணிசமான வளர்ச்சியோ, ஆலைத் தொழிலாளர்களின் உருவாக்கமோ அற்றிருந்த கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களது சமூக, பொருளாதாரப் பின்னணியில், விரல் விட்டு எண்ணக்கூடிய பெருநில உடைமையாளர்களது மத்தியில் இருந்து உருவான கிழக்கு மாகாண முஸ்லிம் தலைமை, தன்னிச்சைப்படி எதிர்விமர்சனங்களின்றி கட்சித் தாவல்களினுல் ஈடுபடக் கூடியதாக இருந்தமை, ஆச்சரியப்படக் கூடிய ஒன்றலல. இவர்களது கட்சித் தாவல்களுக்குத் தரகுவேலை செய்யவும், சித்தாந்த ரீதியான நியாயப்படுத்தல்களை முன்வைக்கவும், கொழும்புசார் முஸ்லிம்களின் வர்த்தக முதலாளித்துவமும், அவர்களுக்குச் சேவை செய்த கல்விமான்களும் எப்போதும் தயராகவே இருந்தனர்.

மேற்படி நிலைமைகளை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தறிந்து தமிழர்களதும், முஸ்லிம் மக்களதும் ஐக்கியத்துக்கான நடைமுறைகளை வகுத்துக் கொள்ளும் அரசியல் ஞானமோ, அர்ப்பணிப்போ அற்றிருந்த தமிழரசுக் கட்சியும் தனது வர்க்கக் குறும்சங்களுக்கு அமைய, முஸ்லிம் மக்கள் அரசியலில் நம்பத்தகுந்தவர்கள் அல்ல என்ற அவநம்பிக்கையையும், இதன் அடிப்படையில் எழுந்த முஸ்லிம் விரோதப் போக்கையும் வெளிப்படுத்தியது..

www.tamilarangam.net

உண்மையில இப்போக்கு 1961 ம் ஆண்டில தமிழ் பேசும் மக்கள் வெகுஜன அடிப்படையில சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தை சிறீமாவோ பண்டாரநாயக்காவின் அரசு, இராணுவத்தை அனுப்பி காட்டுமிராண்டித்தனமாக முறியடித்த பின்னர் நிலவிய அவநம்பிக்கை நிறைந்த சூழலில் முதன்மை பெறத்தொடங்கியது.




1961 ஏப்பரல 17 ம் திகதி சிறீமாவோ பண்டாரநாயாக்கா அரசின் அரச பயங்கரவாதத்தால தமிழ் பேசும் மக்களது சத்தியாக்கிரகப் போராட்டம் முறியடிக்கப்பட்டது.

"பிறந்துவிட்ட மனிதன் இறப்பது ஒரு முறைதான். அதை நம் இனத்தின் எழுச்சிக்குப் பயன் படும் வழியில் பயன்படுத்துவதே நம் இனத்துக்குப் புரியும் சிறந்த பணி" (தடுப்புக்காவலில நாம் புதுமைலோலன்) என எழுதியும் பேசியும் வந்த மன்னார் எருக்கலம்பிட்டியைச் சோந்த கே.எஸ்.ஏ.கபூர், தமிழரசுக் கட்சியின் பிரச்சாரப் பீரங்கிகளுள் ஒருவராக அமைந்த கல்முனை மசூர் மௌலானா என்பவர்கள் கைதாகி பனாகொடை முகாமில தமிழரசுத் தலைவர்களுடன் சிறையிடப்பட்டிருந்தார். இருந்தும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழரசு கட்சியின் கல்முனை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சீ.அகமட் 13,07,1961ல தமிழரசுக் கட்சியில இருந்து விலகி சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசுடன் சோந்து கொண்டமையே தமிழரசாருக்கு முக்கியமானதாகத் தெரிந்தது.

சத்தியாக்கிரகப் போராட்

www.tamilarangam.net

டத்தில் வடமாகாணத்திலும் சரி, கிழக்குமாகாணத்திலும் சரி மனப்பூர்வமாகப் பங்குபற்றிய சாதாரண முஸ்லீம் மக்களேயோ பஞ்சகொடை இராணுவச்சிறைக்கு தம்முடன் கைதிகளாகத் தொடர்ந்து வந்த முஸ்லிம்களேயோ முதன்மைப் படுத்துவதற்கு பதிலாக, இப்பிரதேசங்களின் பூர்ஷுவா முஸ்லிம் தலைமைகளின் போக்கையே தமிழரசுக் கட்சியின் அன்றையே குட்டி பூர்ஷுவா, பூர்ஷுவாத் தலைவர்கள் கருத்தில் கொண்டனர்.

இந்த அவநம்பிக்கை நிறைந்த காலகட்டத்தை சாதாரணமாக்கிக் கொழும்புசார் கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக முஸ்லிம் மக்களின் பிரதேசங்களில் சிங்கள பௌத்தக் குடியேற்றங்களை நிறுவுவது இலகுவாகியது. எனினும் 1965ல் தமிழரசுக் கட்சி ஐ. தே. க அரசுடன் சேர்ந்து கொண்டு தமிழ் பேசும் மக்களுக்கு இதே துரோகத்தை செய்தது என்பதையும்; முஸ்லிம் தலைவர்கள் மட்டுமல்ல பலவேறு தமிழத் தலைவர்களும் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் வெற்றி பெற்றபின் மேற்படி கட்சிகளில் இருந்து விலகி, சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளுடன் சேர்ந்துள்ளனர் என்பதையும் நாம் மறந்துவிடுதல் இயலாது.

இன்று முஸ்லிம் மக்களது பலவேறு பிரதேசங்களிலும் பாரம்பரியக் கிராமங்களிலும் கல்வியும் மத்திய தர வர்க்கமும் பரவலாகி வளர்ச்சியடைந்து வருகிற ஒரு காலகட்டமாக அமைந்துள்ளது. இதனால் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கும், அதனிடம் சரணாகதி அடைந்துள்ள கொழும்புசார் முஸ்லிம் தலைமைகளதும் அரசியல் வஞ்சனைகளுக்கு எதிராக பரந்து பட்ட முஸ்லிம் மக்களது குரல், குறிப்பாக இளைஞர்களது குரல், இலங்கைத் தீவின் நாலாபுறத்திலிருந்தும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

இதனால் தமிழ் முஸ்லிம் மக்களது ஐக்கியத்தைப் பலமாக ஓர் அத்திவாரத்தில் கட்டி எழுப்புவதற்கு முன்னர் எப்போதும் காணப்படாத வாய்ப்புகள் நிறைந்த ஒரு வரலாற்றுக் காலகட்டமாகவும், இன்றைய காலகட்டம் அமைகிறது.

இத்தகையதொரு தருணத்தில் நினைவு கூரத்தக்க நிகழ்ச்சிகள் எமது வரலாற்றில் அறவே இல்லாமல் போய் விடவில்லை என்பதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிரான கிளர்ச்சியும் இன உணர்வும் ஓங்கியிருந்த 1955ம் ஆண்டில் யாழ்ப்பாண நகர தமிழ் வர்த்தக முதலாளிகளும், அவர்களுக்குச் சேவை செய்யும் கற்றறிந்த தமிழ் மேலோர்களும் தமிழரசுக் கட்சியின் தலைமையைத், தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இத்தகைய சீரழிவிற்கு ஆட்பட்ட தமிழரசுக் கட்சியின் கண்களில் கொழும்பு வாழ் முஸ்லிம்களின் வர்த்தக முதலாளித்துவ தலைமையும், அதன் கல்விமான்களும் பேரினவாத சிறீலங்கா சுதந்திரக்

www.tamilarangam.net

கட்சிக்கு வழங்கிய ஆதரவே, பொருட்டாகத் தெரிந்தது.

இப்படியாக தமிழ் முஸ்லிம் உயர் வர்க்கங்களது போட்டிகளும் பூசல்களும், சாதாரணத் தமிழர்களதும், முஸ்லிம்களதும் தலைகளில் சுமத்தப்பட்டன. "முஸ்லிம்களை அரசியலில் நம்பமுடியாது." என்ற கருத்து தமிழர்களிடையிலும், "தமிழர்களை அரசியலில் நம்பமுடியாது." என்ற கருத்து முஸ்லிம்களிடத்திலும் பரவலாகிய காலகட்டமும் இதுவேயாகும்.

இதன் பின்னர்,தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழரசுக் கட்சியை அடியொற்றி வந்த ஏனைய இயக்கங்களோ, தமிழ் முஸ்லிம் மக்களது ஐக்கியத்தில் குறிப்பிடத்தக்க கரிசனையைக் காட்டவில்லை.

1956ல் இடம் பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கல்முனை, பொத்துவில் தொகுதிகளில் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களான. எம்.எஸ். காரியப்பரும், எம்,எம், முஸ்தப்பாவும் வெற்றி பெற்றனர். 1960 ல கல்முனைத் தொகுதியில் எம்.சி அகமதுவும், 1965ல் மூதூர் தொகுதியில் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களான M.C.அகமதுவும், 1965ல் மூதூர் தொகுதியில் M.E.H. முகமட் அலியும் தமிழரசு வேட்பாளர்களாக வெற்றி பெற்றனர். வெற்றி பெற்றதன் பின்னர் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகிய இவர்கள் துரதிஷ்டவசமாக சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளுடன் சேர்ந்து கொண்டனர். இதனால் சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளுக்கு பிதாவாக ஒரு முஸ்லிம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். 07.01.1955ல் நகர பிதாவாகத் தெரிவு செய்யப்பட்ட காதி M.M. "நான் மதத்தில் முஸ்லிமாயிருப்பினும் இனத்தில் தமிழன் "(ஈழகேசரி, 09. 01. 1955) என அறிக்கை வெளியிட்டார்.

இவரது வெற்றிக்கு தமிழ்த் தேசியவாதிகளும், மு.கார்த்திகேசன் தலைமையில் இடதுசாரிகளும், ஈழகேசரி ஸ்தாபனத்தினரும் ஐக்கியப்பட்டு உழைத்தனர் என்பதுவும் மகிழ்ச்சியுடன் நினைவு கூறத்தக்க வரலாற்றின் உதாரணமாகும்.

(தொடரும்)

கவிஞர்கள் ஒன்று கூடி
களம் ஒன்று அமைத்து
கடவுளில் இருந்து
காமம் வரையும்
கட்டப்பொம்மனிலிருந்து
காக்கைவன்னியன் வரையும்
கதைத்து முடித்தனர்
காற் சட்டையை
கறையான் அரிக்கும்வரை

**இனியன்**

www.tamilarangam.net

# அஞ்சலிகளின் அஞ்சலி

**ரமேஷ்**

சுவரொட்டி 1: இன்றைய ஈழத்து சுவர்கள் என்ன இலங்கை பூராவும் நாங்கள்தான் மக்களை விட அதிகமாக நடமாடுகின்றோம்.

சுவரொட்டி 2 : இன்றைக்காவது அந்த குறுகிய நிலையில் இருந்து விடுபட்டு இலங்கை முழுவதும் பற்றிச் சிந்திக்கின்றோம்.

சுவரொட்டி 1 : நான் இப்போது உன்னுடன் விவாதம் புரிவதற்கு செய்தி கூறவில்லை. எல்லா இடங்களிலும் காட்டுத் தர்பார் நடக்கின்றது.

சுவரொட்டி 2: அதனால்தான் பரவலாக நம்மைப் போன்றவர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

சுவரொட்டி 1: அதைவிடு என்ன பக்கத்து வீட்டில் ஒரு குரல் இரவு பகலாய் அழுகின்றது.

சுவரொட்டி 2: அது பெரிய சோகம் - அந்த வீட்டுப் பெடியன் அந்நிய இராணுவத்திற்கு எதிராக நின்றவன், துரோகி என்று அவனை சுட்டுப்போட்டாங்கள் அதுதான்....

சுவரொட்டி 1: நீ அவனை எனக்கு அறிமுகம் செய்யவில்லையே!

சுவரொட்டி 2: அந்த சந்தியில என்னுடைய சிலைக்கு பக்கத்தில் இருக்கின்ற குடியிருப்புகளில் வைத்துக் காட்டினனான் என்று நினைக்கின்றேன்.

சுவரொட்டி 1: உன்னுடைய சிலை எப்போதே உடைச்சாச்சே!

www.tamilarangam.net

சுவரொட்டி2: நான் இப்போது சிலையை பற்றி கதைக்க வரவில்லை.. அதை வைக்கவும் சொல்லவுமில்லை. எங்கே உனக்கு அறிமுகம் செய்தது பற்றி சொல்லவந்தேன்.

சுவரொட்டி1: பொறு வான் ஒன்று வருகிறது.

சுவரொட்டி2: என்ன எமது பிரதேசங்களில் (சுவர்களில்) திட்டமிட்ட குடியேற்றம் நடைபெறுகின்றது.

சுவரொட்டி3: ஏதாவது அரசியல் வாக்குறுதியாக இருக்கும்.

சுவரொட்டி1: என்ன கொடுமை... அதில் பன்னிரெண்டு மானிடம் நிறைந்திருந்தது. அதை கூண்டோடு அழிக்கின்றுங்கள்.

சுவரொட்டி2: நல்ல காலம் நாங்கள் தப்பித்தோம்.

சுவரொட்டி3: உன்ஞல் எங்களுக்கு ஏதாவது சலுகையே தெரியவில்லை.

சுவரொட்டி2: அதில்லே எவனோ மழைக்கு ஒதுங்கியவன் மேல் இருந்து கீழ் வரை தன் நேரத்தை மினக்கெடுத்தியிருக்கிருன்.

சுவரொட்டி1: ஏன் இந்த மாதிரி எல்லாம் செய்கின்றாங்கள்?

சுவரொட்டி2: இவை எல்லாம் எம் மக்களின் பார்வையில் இருந்தால் இவர்களின் நகர்வுகள் பாதிக்கும்.

சுவரொட்டி3: இவங்களுக்கு எங்கே தெரியப்போகின்றது எங்களை போன்ற மானிடங்கள் மக்களின் உள்ளங்களில் நிறைந்திருக்கும் என்பதை...!

சுவரொட்டி2: சத்தம் போடாதே. மக்களுக்குள் நாம் உறைந்திருக்கின்றோம் என்றுகேள்விப்பட்டால் அவனவன் சனத்தை சுடப்போகிருங்கள்....

சுவரொட்டி3: யாரோ புதிதாக நமது குடியிருப்புக்களில் !!??

www.tamilarangam.net

சுவரொட்டி 1: வா போய் பார்ப்போம்.

சுவரொட்டி 2: ஓர் பெண் போராளி...!

சுவரொட்டி 1: நீ கதை.

சுவரொட்டி 2: எங்களை என்ன பேச்சுவார்த்தைக்கு என்று வைத்திருக்கின்றீர்களோ...

சுவரொட்டி 1: ஊரை குழப்புகிறவங்களை வேறு எதற்கு...!

சுவரொட்டி 2: சகோதரிக்கு என்ன நிகழ்ந்தது?

சுவரொட்டி 4: அன்னிய இராணுவத்திற்கு எதிராக போராடி ஒரு வருடம் பூர்த்தி.

சுவரொட்டி 4: நீங்கள் வந்துகுடியேறி கனகாலமோ .....? எப்படி.....??

சுவரொட்டி 2: நாங்கள் இருவரும் எதிர் எதிராக சகோதரயுத்தத்தில் நிர்ப்பந்திக்கப்பட்டதால்...

சுவரொட்டி 4: இன்றைக்கு உங்களுக்குள் எற்றத்தாழ்வுகள் இல்லையா?

இப்போதுள்ள சமூகத்தின் வரலாறனைத்தும் வர்க்கங்களிடையே உள்ள போராட்டத்தின் வரலாறே. ஒரே வார்த்தையில் சொல்லப் போனால் அடிமைக்கும் அடிமை எஜமானுக்கும் இடையிலான போராட்டம், சில காலங்களில் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும், சிறிது சிறிதாகவும், நீண்ட தொடராகவும் முடிவில் சமூகத்தை புரட்சிகரமானதாக மாற்றவும், சில வேளைகளில் சம்பந்தப் பட்டவர்க்கங்களின் அழிவிலும் முடிகிறது.

www.tamilarangam.net

சுவரொட்டி 1: நாங்கள் இன்று மானிடங்கள்.

சுவரொட்டி 4: அப்படி என்றால் எங்கள் பிரதேசங்களில் அகிம்சையில் அன்னியத்தை எதிர்த்த அன்னை இன்று தெய்வமாகவும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும்நேசித்து நடு வீதியில் துப்பாக்கி குண்டிற்கு இரையாக்கப்பட்ட நம் சகோதரி மக்களின் பார்வையில் இருந்தும் மறைக்கப்பட்டிருக்கின்றாள்...

சுவரொட்டி 1: இதற்காக தொடங்கப்பட்ட புத்தகத்தில் இவர்கள் தொடக்கமும் அல்ல, மாறாக முடிவும் அல்ல- ஏற்கனவே நிறையப் பக்கங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

சுவரொட்டி 4: உது உண்மை ஓர் உதாரணத்திற்கு அந்த சம்பவத்தை கூறினேன்.

சுவரொட்டி 2: மனிதத்தை நேசிக்கும் மனித உறைவிடங்களில் நம் மானிடங்கள் இன்னும் மரணிக்கவில்லை.

சுவரொட்டி 2, சுவரொட்டி 3, சுவரொட்டி 1, சுவரொட்டி 4:
மனிதத்தை நேசிக்கும் மனித உறைவிடங்களில் நம் மானிடங்கள் இன்னும் மரணிக்கவில்லை.



புறநிலை யதார்த்த நோக்கினடிப்படையில் உண்மை மீதான வேட்கை, விமர்சனரீதியான நேர்மையான நிலைப்பாட்டை வெளிக்கொணர்தல் போன்றவை எமது சமூகத்திற்கு இன்று தேவையானவை மட்டுமல்ல அது எம்மில் பலரின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். எமது சமூகம் அழிவில் இருந்து தப்பிப்பிழைப்பதற்கு நாம் இந்த நிலைப்பாட்டை எடுப்பது இன்றியமையாததாகிறது.."

*- ராஜனி திராணகம*

www.tamilarangam.net

# ஒரு மனிதனின் நாட் குறிப்பிலிருந்து !

## மார்கழி 14.

இரவு மணி பன்னிரண்டைத் தாண்டிவிட்ட போது தூரமாக ஒரு வாகனம் வந்து நிறுத்திய ஓசை கேட்டது. தூக்கக் கலக்கத்தில் சோர்ந்து போயிருந்த நாம் உசாரடைந்தோம்.

நாம் சந்தேகப்பட்டபடி "அவர்கள்" எம்மைத் தேடி வந்திருந்தால் அவர்களின் கையில் சிக்காமல் தப்பியோடத் தயாராகிறோம். அலை சில நிமிடங்கள் கரைந்து போயின. நாம் எதிர்பார்த்தபடி அவர்களின் ஆரவாரச் சந்தடிகள் எதுவும் எழவில்லை. இதனால் வந்தவர்கள் யார்? என்ற சந்தேகம் எமக்கு எழுந்தது. கிராமத்தில் பாதுகாப்பை நாடி எமது நண்பர்கள் யாரேனும்தான் வந்திருக்கிறார்களோ என்ற ஐயமும் ஏற்பட்டது.

நிலைமையை அவதானித்து வர பாலாவை அனுப்பினோம். மிகவும் எச்சரிக்கையோடு சென்றான். பாலா சென்று சிறிது நேரத்தில "தட தட" என்று ஓடும் சத்தமும் "பிடி பிடி" என்ற கூக்குரலகளுடன் சிலா துரத்தும் சத்தங்களும் கேட்டது. "அவர்கள்"தான் வந்திருக்கிறார்கள் என்று எமக்குத் தெரிந்து விட்டது.

இனி அவ்விடத்தில இருப்பது ஆபத்து என்று சிந்திக்க முன்னரே நாம் நால்வரும் சிதறி ஓடத் தொடங்கினோம்.

நான் பக்கத்து வளவுக்குள் ஓடி, கிளுவை வேலிகளுக்கு இடையாக ஏறி விழுந்து ஓடினேன். அப்போதுதான் நான் அணிந்திருந்த சேட் வெள்ளையாக இருந்ததை அவதானித்தேன். இது இரவு நேரத்தில் அடையாளம் காட்டி கொடுத்து விடும் இரவு நேரத்துக்கென கறுப்பு நிறமே பாதுகாப்பானது. அதுவரை இதுபற்றி சிந்திக்கவில்லை. ஓடிக்கொண்டிருக்கும் போதுதான் அவதானித்தேன். ஓடிக் கொண்டே "சேட்டை"க் கழற்றி ஒரு

**செழியன்**

www.tamilarangam.net

குடிசையின் கூரைக்குள் செருகி விடுவதற்காக ஒரு கணம் நின்றபோது நிலைமையை சற்று அவதானித்தேன்.

"அவர்களின்" ஆரவாரச் சத்தங்கள் கேட்டபடி இருந்தது. எம்மை பின் தொடர்ந்து துரத்தி வருவதைப் போலவும் இருந்தது. எமது ஆராவாரத்தில் மனிதர்கள் விழித்துக் கொண்டார்களோ என்னவோ கிராமத்து நாய்களெல்லாம் விழித்துக் கொண்டு கூட்டாகவும், தனியாகவும் குரைக்கத் தொடங்கின. இச் சந்தர்ப்பத்தில் தொடர்ந்து ஓடுவதைவிட ஒரு வீட்டுக்குள் புகுந்து அந்த வீட்டுக்காரர்களில் ஒருவனாய் படுத்து விடுவது புத்திசாலித்தனமாய் எனக்குப் பட்டது.எனது யோசனையையிட்டு நானே என்னை பாராட்டிக் கொண்டு நான் நின்று கொண்டிருந்த முற்றத்துக்குரிய வீட்டை அணுகினேன். சந்தடிச் சத்தங்களால் படலையைத் திறந்து போர்வையை போர்த்தி தூக்க கலக்கத்துடன் ஒரு பெண்மணி முற்றத்துக்கு வந்தார். அந்த நேரத்தில் ஒரு அற்ப மகிழ்ச்சியுடன் "அக்கா அவர்கள் என்னைத் துரத்துகிறார்கள், தொடர்ந்தும் ஓடினால் பிடிபட்டு போய் விடுவேன்.எனவே உங்கள் வீட்டில் கொஞ்ச நேரம் படுத்து நித்திரை போல இருக்கிறேன். பிறகு.... " நான் முடிக்கவில்லை. மிரட்சியுற்ற அந்த பெண்மணி முடியாது என தலையைப் பல தடவைகள் ஆட்டினார். தொடர்ந்து விவாதிப்பதற்கோ, விளங்க வைக்கவோ, அனுதாபத்தை திரட்டுவதற்கோ உரிய நேரமது வல்ல. முடியாது என தலையாட்டியதுமே மறுபடி நான் ஓடத் தொடங்கினேன். வேலிகளையும் கிணறுகளையும் தாண்டி நான் ஓடிய போது எனக்கு முன்பாக பரதனும் எமக்கு செய்தி தந்த அந்தப் புதிய நண்பரும் ஓடிக்கொண்டிருந்தனர்.

ஒரு வேலி ஒன்றுக்குள் புகுந்து செல்ல முடியாமலும், ஏறியும் செல்ல முடியாமலும் அவர்கள் தடுமாறிக் கொண்டிருந்த போது அவர்களை நான் அண்மித்துவிட்டேன்."பரதா இதில நின்று நேரத்தை வீணாக்காதே. வேறு பக்கமாகப் போ! என்று கூறியபடி அவர்களை மறுபக்கமாக இழுத்துக் கொண்டு ஓடினேன். நாம் ஓடிய பாதை நெடுகிலும் நாய்கள் குரைத்து சத்தமிட்டன. இப்போ நாம் அந்த கிராமத்தின் எல்லைக்கு வந்துவிட்டோம்.அங்கு சற்று இருந்து நிதானித்து மூவரும் நின்றோம். "கந்தசாமி எங்கே?" எனக் கேட்டேன்."அவர் இன்னோர் திசையால் பறந்தோடி விட்டதாக "பரதன் கூறினான்.

இனித் தொடர்ந்து ஓட வேண்டாம், மிகவும் மெதுவாக பதுங்கி பாதுகாப்பாக நகர்வோம் எனக் கூறினேன். அதனையே பரதனும் ஆமோதித்தான். நாம் ஓடினால் அதை நாய்களே குரைத்துக் காட்டிக் கொடுத்து விடும். எனவே பதுங்கி நடப்போம் எனப் பரதன் கூறினான்.

நாம் பேசிக்கொண்டிருந்த போது அக்கம் பக்கங்களில் உள்ள வீடுகளில் இருந்து எமது கிராமத்து தலைகள் வெளிவந்தன. "என்ன ஆராவாரம் ஆமிக்காரன் ஏதும் திடீரென்று வந்து

www.tamilarangam.net

விட்டார்களோ?" என்று விசாரிப்புகள்.

"அவர்கள்" வந்து விட்ட செய்தியைக் கூறினோம். பாலா "அவர்களிடம்" பிடிபட்டிருக்கலாம் அல்லது தப்பியோடியும் இருக்கலாம். பிடிபட்டு இருந்தால் "அவர்களிடம்" இருந்து பாலாவை விடுவிக்க ஏதாவது முயற்சி செய்யும்படி கூறிவிட்டு சேட் இல்லாமல் இருந்த எனக்கு ஒரு கடும் கலரில் சேட்டும் வாங்கிக் கொண்டு அக்கிராமத்தை விட்டு வெளியேறினோம். நிலாவொளி நன்கு படர்ந்து எமக்கு இடையூறு செய்தது. நாம் ஒரு சிறிது தூரம் கரடு முரடான பாதையில செல்லவேண்டியிருந்தது. பின்னர் முள்ளுப் பற்றைகளின் மறைவில சிறிது தூரம் நடந்தோம். வெகுதூரத்திலிருந்து ஒருவர் பார்த்தால் கூட நிலாவொளியில யாரோ சிலர் பதுங்கிச் செல்வதை கண்டுவிடக்கூடிய அபாயம் இருந்தது. நிலாவைப் பார்த்துக் கூட மனிதர்கள் எரிச்சலடைகின்ற நேரங்கள் இருக்கின்றன. மனதுக்குள் கடுமையாக வசை பாடினோம்.

தொடரும்.




● கனடாவின் இலக்கிய முயற்சிகள் கியூபெக்கிலேயே முதலில் ஆரம்பமானதெனலாம். கனடாவின் முதல் தமிழ் சஞ்சிகை "தமிழ் எழில்" எனும் பெயரில் 1983 மாசி மாதம், வீ. ஞானசுந்தரம், ந. முல்லைதிலகன், க.குகநேசன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு "தமிழ் ஈழ விடுதலை ஒன்றிய வெளியீடு" என்ற குறிப்புடன் வெளியிடப்பட்டது. பின் கியூபெக் ஈழத்தமிழர் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டதும், "தமிழ் எழில்" ஒன்றியத்தின் வெளியீடாக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை கியூபெக்கில் பல சஞ்சிகை, பத்திரிகை வெளியீடுகள் தொடர்ந்தவாறு உள்ளன. "தமிழ்எழில்", "தமிழ்ஒளி", இளங்கீற்று", "புரட்சிப்பாதை", "பார்வை", "தாகம்", "தாயகம்",(ரொரன்டோவிலிருந்து தற்போது வெளிவரும் தாயகம் பத்திரிகை அல்ல)" நேர்மை", "நாயகன்", "வீணைக்கொடி" என்பன அவையாகும்.

www.tamilarangam.net

# இலங்கையின் பத்திரிகை ஆரம்பம்

பொதுஜன அபிப்பிராயத்தின் வளர்ச்சியின் தவிர்க்க முடியாத விளைவே செய்திப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளுமாகும். எந்த ஒரு நாட்டினதும் ஜனநாயக வளர்ச்சியானது, அந்நாட்டின் பத்திரிகைகள் ஆற்றும் பணியின் அளவிலிருந்து துல்லியமாக தெரிந்து கொள்ளப்பட முடியும். 19 ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான இலங்கை பத்திரிகைத்துறை இன்று பல பரிமாணங்களூடாக வளர்ந்து வந்துள்ளது. தமிழ் ஆங்கில சிங்கள பத்திரிகைகள் மூன்றையும் ஒரே தட்டில் வைத்து ஆராய்வது கடினமெனுமளவில் அவை மும்மொழியிலும் தனித்துவமாக வளர்ந்துவிட்டிருக்கின்றன.

இலங்கையின் பத்திரிகைத்துறை 1830களின் ஆரம்பத்தில் ஆங்கில மொழியில் ஆரம்பமாகியது. பிரித்தானிய அரசாங்கத்தின் நிர்வாகச் செய்திகளை வெளியிடும் வகையில் அமைக்கப்பட்ட பிரசுரம் ஒன்றே இலங்கையில் முதல் பத்திரிகை எனப்படலாம். இப்பிரசுரம் தேசாதிபதி வி. வில்பெட் ஹோம்டன் அவர்களால் தொடர்ச்சியாக இரண்டு வருடகாலம் நடாத்தப்பட்டது. பின்னர் லண்டனிலிருந்து வெளியான பணிப்புக்கிணங்க, இலங்கையில் தனியார் வெளியீடுகளை ஊக்குவிக்கும் வகையில் இப்பிரசுரம் நிறுத்தப்பட்டது.

**மூர்த்தி**

இலங்கையை மையமாகக் கொண்டு 1834ஆம் ஆண்டு ஆரம்பமான "ஒப்சேவர் அன்ட் கொமர்ஷல் அட்வைஸர்" என்ற பத்திரிகையே இலங்கையின் சுயாதீனப் பத்திரிகைகளின் தொடக்கமாக அமைந்தது எனலாம். இதுவே பின்னர் "சிலோன் ஒப்சேவர்" என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இதன் முதல் ஆசிரியராக இருந்த கே. எலியட் பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கவேண்டும் என்ற கொள்கை கொண்டவராக

இருந்ததால் அரசு சார்பான செய்திகளை மட்டும் பிரசுரிப்பதாக தன் பத்திரிகையை அமைந்துவிடாது, விளம்பரங்கள், சுதேச செய்திகள் என்பவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்தார். மேலும் பிரித்தானியரின் இலங்கை நிர்வாகத்தை விமர்சிக்கும் கட்டுரைகளையும் பிரசுரிக்க முனைந்தார்.

இதன் எதிரொலியாக இப்பத்திரிகைக்குப் போட்டிப் பத்திரிகை ஒன்றும் தோன்றலாயிற்று. அன்றைய தேசாதிபதி, மேலும் பல நிர்வாக அலுவலர்களின் ஆசியுடன் "சிலோன் கிரோனிகல்" என்ற புதிய பத்திரிகை 1837 மே மாதத்தில்ஆரம்பிக்கப்பட்டது. எனினும் அப்பத்திரிகையால் அதிக நாட்கள் வெளிவர முடியவில்லை. "சிலோன் க்ரோனிக்கல்" நிறுத்தப்பட அப்பத்திரிகையின் அச்சியந்திரங்களை வாங்கிய எம்.ரோஸ் என்பவர் 1838 "இல். சிலோன் ஹெரால்ட்" எனும் பத்திரிகையை புதிதாக ஆரம்பித்தார். "சிலோன் ஹெரால்ட்" பிரித்தானியரின் இலங்கை அரச நிர்வாகத்தை விமர்சிக்கும் போக்கைக் கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகைகளின் தாக்கத்தால் இலங்கைப் பத்திரிகைத்துறையில் குறிப்பிடத்தக்கதாக அமைந்த பத்திரிகையான "சிலோன் டைம்ஸ்" 1846 ஜுலையில் ஆரம்பிக்கப்பட்டது பல்லாண்டுகளாக வெளியான இப்பத்திரிகை பின்னர் "டைம்ஸ் ஒவ் சிலோன்" என்று பெயர்மாற்றம் பெற்றது.

பிரித்தானிய அரச நிர்வாகத்தை கடுமையாக விமர்சிக்கும் போக்கில் கே.எலியட் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கொழும்பிலிருந்து வெளியான "கொலம்போ ஒப்சோவா" பெரும்பங்கு வகித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை அப்போதைய தேசாதிபதியாயிருந்த ரொறிஸ்டன் அறிமுகம் செய்த பல வரிவிதிப்புக்களுக்கு எதிரான கருத்துக்களை பிரசுரித்தது. அக்காலப்பகுதியில் ஐரோப்பாவில் (பிரான்ஸ்) ஏற்பட்ட புரட்சி மயப்படுத்தப்பட்ட அரசியல் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் கட்டுரைகளும் அதனில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. 1848 இல் இலங்கையில் எற்பட்ட மக்கள் எழுச்சியினைப் பற்றியும், தேசாதிபதி ரொறிஸ்டன் அவர்களின் நடவடிக்கை பற்றியும் விசாரிக்க வந்த பிரித்தானிய விசாரணைக்கமிஷன் தமக்கு ஆதாரமாக "கொலம்போ ஒப்சோவர்" வெளியிட்ட செய்திகளையும், கட்டுரைகளையும் எடுத்தக்கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கொலம்போ ஒப்சேவர்" எலியட்டின் பத்திரிகைத்துறை முயற்சிகளால் கவரப்பட்டு அவருடன் இணைந்து பணியாற்றிய இலங்கைப் பரங்கியரான ஏ.லோரன்ஸ் 1859 இல் "எக்சிமினர்" என்ற இன்னோர் பத்திரிகையை ஆரம்பித்தார். இவரது கட்டுரைகள் பலவும் கூட பிரித்தானிய நிர்வாகத்தை சாடி எழுதப்பட்டனவாயிருந்தன. மேலும் இவரும் இவரது சகோதரருமாகச் சேர்ந்து "யங் சிலோன்" என்ற சஞ்சிகையையும் ஆரம்பித்தனர். அக்காலத்தின் பத்திரிகைத்துறை சகலகலா வல்லவராக திகழ்ந்த லோரன்ஸ் தன் பத்திரிகைகளில் சகல அம்சங்களையும் கையாண்டது வெகுவாகப் பாராட்டப்பட்டது. அரசியல், விஞ்ஞான, இலக்கியக் கட்டுரைகள், கார்ட்டூன்கள் என்பவற்றை இவரே தனது பத்திரிகைக்காக ஆக்கிவந்தார். இவரது மரணத்துடன் "எக்சிமினர்" பத்திரிகை சோபை இழந்து நிறுத்தப்பட்டது.

இதற்கிடையே 1860 இல் கண்டியிலிருந்து "கண்டி ஹெரால்ட்" எனும் பத்திரிகை ஒன்று தேயிலைத்தோட்ட அதிபர்களின் நன்மைகருதி வெளியிடப்பட்டது.

இலங்கையின் சிங்களப் பத்திரிகைத்துறை 1860-1862 களில் வளர ஆரம்பித்தது "லக்மினி பஹன", "லங்கா லோகய", "லக்ரிவி கிரண" போன்ற முதல் சிங்களப் பத்திரிகைகள் இக்காலப் பகுதியிலேயே வெளியிடப்பட்டன. அக்காலத்தில் சிங்கள மொழி வளர்ச்சிக்கும், பௌத்த மதத்திற்கும் இப்பத்திரிகைகள் ஆற்றியபணி மகத்தானது.

எம்மொழியைப் பொறுத்தவரை சைவ சமயத்தை பாதுகாக்கும் நோக்குடனும், தமிழ் மொழி வளர்ச்சி பற்றிய ஆர்வத்துடனுமே பத்திரிகைப் பிரசுரங்கள் தமிழில் வெளியாயின. இவ்வகையில் இத்துறையின் முன்னோடியாக ஆறுமுகநாவலரவர்களை குறிப்பிடலாம். பத்திரிகை ரூபத்தில் திரு ஏ. சபாபதி அவர்களின் பங்களிப்புடன் வார வெளியீடாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த "ஹிண்டு ஓர்கன்", "இந்துசாதனம்" இரண்டும் ஈழத்துப் பத்திரிகைத்துறைக்கு ஆங்கிலத்திலும், தமிழிலுமாக முதல் வித்திட்டன.

இவ்வாறுக பத்தொன்பதாம் நூற்றுண்டில் மும்மொழிகளிலும் இலங்கையில் செய்திப் பத்திரிகைத்துறை ஆரம்பமாகி வளரலாயிற்று.

ஆதாரம் (ரஷ்யநூலான)
"பொலிசெஸ்கய மீசில்
சிறீலங்கி வ் நோவய
வ்ரேமிய"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"**கோ**ட் சென்ட் கதரீன்" ஸ்டேஷனிலிலிருந்து வேலைக்குப் போவதற்காக மெற்ரேவில் ஏறுகிறேன்.

"இந்தமுறையாவது கார் ஒண்டு வாங்கிப்போடவேணும்... பிள்ளையளோடை 'டே கேர்', பிறகு வேலை எண்டு மெற்ரேவிலை அலைய நேரமில்லோ வீணாகுது. அப்பாவுக்கு காசில்லை எண்டு எழுதிப்போட்டுவிட்டு கார் ஒண்டு உடனே வாங்கியே தீரவேணும்! பிள்ளையளையில்லோ மெற்ரேவிலையும் பஸ்ஸிலையும் கொண்டு திரியவேண்டிக்கிடக்கு..."

மூலை சீட் ஒன்றாக பார்த்து இருந்துகொண்டு மீண்டுமொரு முறை அப்பாவின் கடிதத்தைப் படிக்கிறேன்.

"தம்பி... இந்த மாதம் முடியுமுன் ஒரு ஐந்து அனுப்பி வை... காணி ஒண்டு மலிவா வருகுது. மாலதிக்கும், கோமதிக்கும் கல்யாணம் செய்து வைத்துவிட்டுத்தான் கண்ணை மூடவேண்டும்...."

பிறகும் ஒரு ஐயாயிரம் டொலர் அனுப்பட்டாம். இஞ்சை என்ன டொலர் மரத்திலையோ காய்க்குது... எரிச்சலாக இருக்கிறது.

ஒருவகையில் அப்பாவை நினைக்கவும் பாவமாகத்தான் இருக்கிறது. ஏழு பிள்ளைகளில் ஆறுபேரை பெண்களாகப் பெற்றுவிட்டு சீதனம் சீதனம் என, தன் உழைக்கும் வயது முழுவதும் ஓடி ஓடி உழைத்தவர்தான்... ஒரே மகனான என்னை பாதுகாப்பாய் வாழடா என கனடாவரை அனுப்ப காசை தண்ணீராய் செலவழித்தவர்தான்... ஆனால் இப்ப நானே அப்பாவாகிவிட்ட பிறகு என் நிலைமையை கொஞ்சம்கூட யோசித்துப் பார்க்கிறாரில்லையே... நானும் எங்கள் குடும்பபாரத்தை சரி சமனாகத்தானே சுமந்து வந்திருக்கிறேன். அக்காமார் இரண்டுபேருக்கு வீடு, வளவு, நகை, நட்டு அனைத்தும் என் "உபயம்"தான். என்னைக் கனடாவுக்கு அனுப்ப அப்பா பட்ட கடனை அடைத்ததும் நானேதான். மூன்று அக்காமாரதும் கணவன்மாரை கனடா கூப்பிடவென்று ஆரம்பித்து, நான் கட்டிய டெலிபோன் பில்தான் எவ்வளவு... சீட்டு போட்டு மாண்ட தொகை எவ்வளவு... தங்கைகள் மாலதிக்கும், கோமதிக்கும் படிப்பு செலவு முதல், ஆமி உடைத்த மதில் திருப்பிக்கட்டும் செலவுவரை நான்தான் பார்க்கிறேன்.

இத்தனைக்கும் இப்போ என்னிடம் பணமே இல்லையென்று சொல்லுகிறேன் - கொஞ்சம் பொறுத்து அனுப்புகிறேன் என்றால் கேட்க மாட்டேன் என்கிறார் - உடனே அனுப்பட்டாம்.

என் கல்யாணத்தை கூட இந்த அப்பாதான் அவசரப்படுத்தி

# அப்பாக்கள்

சிறுகதை

அமலா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்தி வைத்தார். மாமா மகளிற்குத் தாலி கட்டி, இரண்டு பிள்ளை பெற்றதைத் தவிர வேறு சுகமில்லே. தர்மபத்தினிவேறு வின்ரரில், "காலுக்கை நோகுது", என்றும் சம்மரில் "மண்டைக்கை குத்துது..." என்கிருள். பிள்ளைகளை டே கேர் கொண்டு போகக் கூட மாட்டாளாம். சீ... ஒரு கார் உடனே வாங்கத்தான் வேணும்.

**மெ**ற்ரோவிலிருந்து இறங்கி நான் வேலை செய்யும் ரெஸ்ரரான்டை அடைகிறேன். எரிச்சல் வருமளவிற்கு எச்சில் கோப்பைகளை அடுக்கி வைத்திருக்கிருர்கள். விடியும்வரை கழுவ வேண்டும்... "ஓ" வன்று கத்தலாம் போல இருக்கிறது.

"ஹாய்..! சிவா.." என்று குரல் கேட்கிறது. மிஷேல் - என்னுேடு வேலே செய்யும் பிரெஞ்சுக்காரன் - வருகிருன். வாராவாரம் உழைக்கும் பணத்தை வெள்ளிக்கிழமைகளில் செலவு செய்ய வேண்டும் என்றே பிறந்தவன்போல் வாழும் மனிதன். சந்தோஷமாக திரிகிருன். 'ஸ்போர்ட்ஸ் 'கார்கூட வைத்திருக்கிருன்.

"ஹேய்..சிவா...! என்ன களைப்பா? அல்லது சுகமில்லேயா?? " என்றுகொண்டே ஒரு கிளாஸ் பியரை எடுத்துக்கொள்கிருன்.

"ஒன்றுமில்லே.." என்ற நான் அவனே உற்றுப்பார்க்கிறேன். வெள்ளேப் பயலே அதிஷ்டசாலியடா நீ....

மனதில் ஏதோ குறுகுறுக்கவே "மிஷேல்! உன்னே ஒன்று கேட்கலாமா..?" என்கிறேன்.

என்ன என்பதுபோலப் பார்க்கிருன் மிஷேல்.

"மிஷேல்! உன் பெற்ருேருக்கு நீ உதவி செய்வதுண்டா? அதாவது பண உதவி செய்வதுண்டா??" என்று படாரெனக் கேட்கிறேன்.

மிஷேல் என்னைப் புதுமையாகப் பார்க்கிருன். ஒரு நிமிட மௌனம். பியரை உறுஞ்சிக்கொள்கிருன்.

"சிவா...! நான் ஏன் அவர்களுக்கு உதவவேண்டும்? அவர்கள் எனக்கு என்ன செய்தார்கள்?? அவர்களின் காதல் என்னை பிறக்கவைத்தது. அவ்வளவுதான். பதிஞன்கு வயதிலிருந்து நான் எனக்காகத்தான் வாழ்கிறேன். அவர்களும் எனக்கு உதவுவதில்லை. நானும் அவர்களுக்கு உதவத்தேவையில்லே..!"


அவன் சொன்னது என் மண்டையில் உறைக்கிறது.

பெற்ருேர் பிள்ளேக்கு உதவவில்லே என்பதால் இந்தப் பிள்ளே தன் பெற்ருேருக்கு உதவத் தேவையில்லே என்கிறது. ஆனுல் எங்கள் பெற்ருேர் இத்தனை வயதான பின்னரும் கூட சரியாகவோ பிழையாகவோ தன் பிள்ளேக்களுக்காகவே சிந்திக்கிருர்களே..!

என் தங்கைகளுக்காக என்னிடம் என் அப்பா பணம் கேட்கிருர் என்பதைவிட, தங்கள் பிள்ளேகளுக்காக என் பெற்ருேர் கவனமெடுக்கிருர்கள் என்பதை நினேக்கிறேன். நெஞ்சு சிலிர்க்கிறது.

காரும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம். கடனெடுத்தாவது முதலில் அந்த அப்பாவின் ஆசையை தீர்ப்போம். பிறகு இந்த அப்பாவின் ஆசையை தீர்க்கலாம்...! ■

www.tamilarangam.net



# சுற்றாடல் பாதுகாப்பு உலகின் புதிய தேவை

மனித இனம் இப்போதுதான் தான் வாழும் சுற்றாடல் பற்றி ஓரளவு கவலைப்பட ஆரம்பித்துள்ளது. உலகின் மூலவளங்கள் அதிகமாகப் பாவனைக்கு உள்ளாக்கப்படுவதால் ஏற்படப்போகும் மூலவளப் பற்றாக்குறையும், கழிவுகளால் ஏற்படும் சுற்றாடல் அபாயமும் சமீபகாலமாக கரிசனையுடன் நோக்கப்பட்டு வருகிறது. அணு ஆயுதக் குறைப்புப் பேச்சுக்கள் முடிவடைந்து வல்லரசுகள்கூட தற்போது சுற்றாடல் பாதுகாப்பு பற்றிப் பேச ஆரம்பித்து வருகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகள்தான் இன்றைய சுற்றாடலின் பாதுகாப்பற்ற தன்மைக்கு மூலகாரணமாகும். உலகின் மூலவளங்களின் பெரும்பகுதி இந்நாடுகளாலேயே உபயோகிக்கப்படுகின்றன. சூழலை அசுத்தப்படுத்தி, இயற்கையை அழிக்கும் செயலிலும் இந்நாடுகளே முன்நிற்கின்றன.

மூலவளங்கள் கழிவுப்பொருட்களாகி தேங்கிநிற்பதே இயற்கையின் அழிவிற்கான ஆரம்பமாகும். பெருந்தொகையான கழிவுப்பொருட்கள் நிலத்தையும், நீரையும், சுற்றாடலையும் தொடர்ந்து மாசுபடுத்தி, வருவது இன்றைய மனித வாழ்வுக்கு ஒரு மாபெரும் அச்சுறுத்தலாக இருந்துவருகிறது.

உபயோகப்படுத்தப்பட்ட செயற்கை பொருட்கள் பெருமளவாகக் குவியும்போது இரசாயன மாற்றத்திற்குள்ளாகி சூழலை நச்சாக்கிவிடுகின்றன. தொழிற்சாலைகள் ஏற்படுத்திவிடும் அமில மழை காடுகளை அழித்து நாடுகளை பாலைவனமாக்கிவிடுகிறது. அழிந்து குறைந்து வரும் காடுகள்தான் பூமியின் பருவநிலை மாற்றத்திற்கு முதல் காரணம் எனக் கருதப்படுகிறது. கடலில் விடப்படும் இரசாயனக் கழிவுகள் கடலையும் களங்கப்படுத்தி கடல்வாழ் உயிர்களைக் கொல்கிறது. இரசாயன விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைபொருட்கள், அண்டவெளியிலிருந்து வீசும் நச்சுக்கதிர்களிலிருந்து பூமியை காக்கும் ஓசோன் வாயுப்படையை உடைத்து நச்சுக் கதிர்களை பூமிக்கு புகவிடுகிறது. இதனால் தோல் புற்றுநோய் உட்பட பல வியாதிகள் பூமியில் அதிகரித்து வருகின்றன.

வளர்ந்துவிட்ட விஞ்ஞானத்தின் எதிர்மறைப் பக்கம்தான் இயற்கையின் அழிவு என்றால் மிகையாகாது. உதாரணத்திற்கு ஒரு கனேடியர் சராசரியாக வருடமொன்றிற்கு 95,000 லிட்டர் நீரை, 2,000 லீட்டர் பெட்ரோலை உபயோகிக்கிறார், 193 கிலோகிராம் பேப்பரை வாங்குகிறார் - 10,000 போத்தல்களையும், 17,500 'கான்'களையும் வீசிவிடுகிறார் என புள்ளிவிபரங்கள்

www.tamilarangam.net

தெரிவிக்கின்றன. சொகுசு வாழ்க்கையால் வருடம் கனடாவில் 24 மில்லியன் டயர்கள், மூன்று பில்லியன் பிளாஸ்டிக் பைகள் வீசப்படுகின்றன. இதுகூட ஒரு சிறு உதாரணமேயாகும். இவ்வாறு உலகம் முழுவதும் உபயோகப்படுத்தப்பட்ட வளங்களை மீளப் பெறுவதெப்படி? கழிவாகிப்போகும் அவற்றிலிருந்து சுற்றுடலை பாதுகாப்பதெப்படி?? இவற்றைப்பற்றி இன்னும் நாம் அசிரத்தையுடன் வாளாவிருக்கலாமா??? உலகம் இதைப்பற்றி இப்போதாவது சிந்திக்காது போகுமேயானால், விரைவில் முழு உலகும் ஒரு வரண்ட குப்பைக்கூடை போலாகிவிடாதா????

கழிவாகி வீசப்பட்ட ஒரு சாதாரண பிளாஸ்டிக் பேனை முற்றாக மறைந்து மண்போலாகிவிட குறைந்தது ஒரு மில்லியன் ஆண்டுகளாவது தேவை. இதே ரீதியில் உலகின் செயற்கை பொருட்களின் கழிவுகளை அழித்து இயற்கைபோலாக்க இப்போதே ஆரம்பித்தாலும்கூட எவ்வளவு காலமாகும் என்பது கேள்விக் குறியே!

இதையுணர்ந்த பல மேற்கு நாடுகள் இன்று தமது சொகுசு வாழ்க்கை முறையை மாற்றியமைக்க முன்வருகின்றன. 'செயற்கை'யைவிட 'இயற்கை'க்கு முக்கியத்துவம் கொடுக்கும் பணியை பெருமளவில் ஆரம்பித்து முன்னெடுத்து வருகின்றன. ஆனால் இயற்கையை பெருமளவில் உபயோகிக்கும் வளர்முக நாடுகளோ மேல்நாடுகளின் இன்றைய 'வாழ்க்கைத்தரத்தை'யே தாமும் கொண்டிருக்க முனைகின்றன. இது ஒரு அபாயகரமான போக்காகும். முழு உலகமும் இந்தகைய 'தரத்தை' கொண்டிருக்கப்போனால் அது இயற்கையின், ஏன் உலகத்தின் பேரழிவாய்த்தான் போய்முடியும்.

இயற்கைமீது கரிசனை கொண்ட மக்களின் தூண்டுதலால் வட அமெரிக்காவின் பல வர்த்தக நிறுவனங்கள் வீசப்படும் கழிவுப் பொருட்களை மீளப் புனரமைக்க ஆரம்பித்துவிட்டன. தற்போது மீளப் புனரமைக்கப்பட்ட போத்தல்கள், பேப்பர்கள், செயற்கை இரசாயன பாவனைப் பொருட்கள் என பல பொருட்கள் பாவனைக்கு வர ஆரம்பிக்கின்றன. மேலும் சில நிறுவனங்கள் பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக மீளப் பாவிக்கக்கூடியவையான சாக்கு, ஓலைப் பைகளை வழங்கவும் ஆரம்பிக்கின்றன.

ஒரு கையில் சாக்குப் பையுடனும், ஓசோன் உடைவினால் தோல் புற்றுநோய் ஏற்படாது காக்க மறு கையில் குடையுடனும் எங்கள் ஊர் புழுகர் பொன்னம்பலம் போல மேற்கு நாட்டாரும் திரியப்போவதை விரைவில் பார்க்கத்தான் போகிறோம்!

**ஜெ. கண்ணம்மா**

> தன்னை முற்போக்குவாதி என்று சுயதம்பட்டம் அடிக்கும் ஒவ்வொருவனும் நடைமுறை என்கின்ற முன்நோக்கிய சிந்தனையின்போது மட்டும், ஏனோ முன்நோக்கியே தன் வீடு சென்றடைந்துவிடுகிறான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றைய திகதிகள்
கடந்துபோன காகிதக் கனவுகளை
மீண்டும் மீண்டும்
கண்ணுக்குள் இழுத்துவரச்
சொல்கிறது!

மலைகளைத் தகர்த்து
தென்றலை புயலாக வீசச்செய்து
சமுத்திர மனசு
அலைகளை ஆயுதங்களாக்கிக்கொள்கிறது
மறுபடியும்!

பாதாளத்தில் வீழ்வதற்காக
நமது பாமரர் தேசம்
பராமரிக்கப்படவில்லை
பதிலாய் —

பன
பே
போ
மீ


இ
இ
இ
உ
வற்

தெ
வட
வ

அ
பு
வி
பூக்
உ

# ஒரு வேணுவின் பெருமூச்சு

www.tamilarangam.net



முல்லையூர்
கே. பாஸ்கரன்

லை
லையில் அறைகூவல் செய்து
கு ஆரம்பமாகிறோம்
ம்!

சி எழுந்தவர்க்கு

இதயங்கள்
எடுக்கப்பட்டு-நெருப்பிலே
போடப்படுகிறது!

லே தாகமெடுத்தால்
க்கு வாய்க்காலில்
து மனித குருதியாக!

ாய்க்காலை வழிமறிப்புச்செய்து
புதிய புயல்களை
ப்போம் புரட்சியாக
ஒரு இனிய தென்றல்
பாக!

www.tamilarangam.net

# கனிவுமில்லைக் கருணையுமில்லை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**ப**ழைய பாகிஸ்தான் மிகவும் செயற்கையான ஒரு தேச அமைப்பு இந்தியக் கொலனித்துவ சமுதாயத்தின் சில முரண்பாடுகளும் அச்சங்களுமே அதன் அத்திவாரமாக அமைந்தன. பூகோள ரீதியாகத் தொடர்ச்சியற்ற இரண்டு பெரும் நிலப்பரப்புகளை ஒரு தேசமாக ஐக்கியப்படுத்துவதற்கு இஸ்லாம் மதத்தைவிட எதுவுமே பொதுவாக இல்லாத நிலையில், மேற்குப் பாகிஸ்தான் கிழக்குப் பாகிஸ்தானிய வங்காளிகள் மீது செலுத்திய ஆதிக்கம் என்றோ ஒருநாள் பிரிவினைக்கு வழிவகுத்திருக்கும். நீண்டகால இராணுவ ஆட்சியும் அதன் ஜனநாயக விரோத பாரம்பரியமும் 1971 இல் வங்காளதேச விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டின. வங்காள தேச மக்களது உணர்வுகளை பூட்டோ அரசாங்கம் மதிக்கத் தவறியதன் விளைவாக எழுந்த கிளர்ச்சியை இராணுவ அடக்குமுறை ஒரு விடுதலைப் போராட்டத்தை வளர்த்தது. இந்தியாவுக்குள் கிழக்கு வங்காள அகதிகள் குவிந்ததைக் காரணங்காட்டி இந்தியா தன் நேரடியான இராணுவத் தலையீட்டை நியாயப்படுத்தியது.

**சி. சிவசேகரம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியத் தலையீட்டில் இரண்டு அம்சங்கள் முக்கியமானவை!

1. இந்தியா பாகிஸ்தானின் உள்விவகாரங்களில் தலையிட்டமை
2. இந்தியா விடுதலைப்போராட்ட சக்திகளிடையே தனக்குச் சாதகமான சக்திகளை வளர்த்து மற்றைய சக்திகளை அழிக்கச் செயற்பட்டமை.

இந்தியா கிழக்கு வங்காள அகதிகளைத் தன் எல்லைகட்குள் அனுமதிப்பதும் அவர்களது மனித உரிமைகட்காகக் குரல எழுப்புவதும் மனிதாபிமானத்திக்குரியன. இந்தியா அவர்களது தற்பாதுபாப்புக்கு உதவி என்ற பேரில அவர்கட்கு இராணுவப் பயிற்சியும் இராணுவ உதவியும் வழங்குவது பஞ்சசீலக் கொள்கைகட்கு முரணாக அமைவன. அதற்கு மேலாக இந்திய இராணுவம் மேற்கில் பாகிஸ்தானுடன் யுத்தம் தொடங்கி கிழக்கு வங்காள விடுதலைப்படைகளுடன் சேர்ந்து செயற்பட்டமை ஆக்கிரமிப்புக்குரியது. முஜிபூர் ரகுமானின் தேசியவாதக் கட்சியும், அவர்களது விடுதலைப்படையும் வெறும் பாகிஸ்தானிய இராணுவத்துடன் மடடும் மோதவில்லை. முற்போக்கான, பாட்டாளிவர்க்க சார்புடைய விடுதலைப் படைகளையும் அவை குறிவைத்தன. பாகிஸ்தானிய இராணுவத்தின் தோலவியை அடுத்து இவர்களது முழுக் கவனமும் மற்றைய விடுதலைப் போராட்ட சக்திகள் மீது திரும்பின.

இந்தியா பாகிஸ்தானுடன் மோதும்போது சோவியத் யூனியனுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றையும் செய்துகொண்டது. இதன் மூலம் இந்தியத் தலையீட்டின்போது சீனாவோ, மேற்கு நாடுகளோ பாகிஸ்தானுக்குச் சார்பாக தலையீடும் வாய்ப்பைக் குறைக்கலாம் என்று கருதியது; சோவியத் யூனியன் தென்னாசியாவில தன் செல்வாக்கை விஸ்தரிக்கக் கருதியது. 1971க்குப் பின்னர் இரு நாடுகளதும் விஸ்தரிப்பு, மேலாதிக்க

www.tamilarangam.net

நடவடிக்கைகள் உச்சமடைந்தது குறிப்பிடத்தக்கது.

வங்காள தேசத்தின் அரசியல் இந்தியாவிற்கு சாதகமான திசையில் செல்லவில்லை. முஜிபூர் ஆட்சி மக்கள் விரோத சக்தியாக மாறியது. அதன் வீழ்ச்சியைத் தடுக்க இந்திய ஆதரவாளர்களால் முடியவில்லை. வங்காள தேச அரசியல் மேலும் சீரழிந்து தொடரான இராணுவ சக்திகளும், இராணுவ சர்வாதிகாரமும் அந்நாட்டின் ஜனநாயக மனித உரிமைகளை அழிக்க வழி வகுத்தன. இந்தியா விரும்பிய விதமாக ஒரு நேச சக்தியாக வங்காள தேச அரசு அமையாவிடினும், பாகிஸ்தானின் பிளவும் பலவீனப்படுத்தலும் இந்திய ஆளும் வர்க்கத்திற்கு ஒரு புதிய தென்பை அளித்தன. இதன் வெளிப்பாடாக இந்தியா சிக்கிமின் உள்விவகாரங்களில் செலுத்திய ஆதிக்கம் போதாதென்று அதை 1974 இல் இந்திய யூனியனில் ஒரு பகுதியாக இணைந்தது. இதையடுத்துக் காஷ்மீர் இந்திய யூனியனின் நிரந்தரமான ஒரு பகுதியாக்கப்பட்டது.

வங்காளதேச விடுதலைப் போரின் போது இலங்கை வகித்த நடுநிலையும் சிக்கிமின் இணைப்பு பற்றி இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளின் எதிர்ப்பும் பெருவாரியான உலக நாடுகளது கருத்துடன் உடன்பாடகவே இருந்தன. ஆயினும் இந்தியா இத்தகைய சுதந்திர உணர்வை எளிதாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. நேபாளமும், பூட்டானும் இந்தியாவின் எல்லைகளூடேயே தமது வர்த்தக அயலுறவுகளை வைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்ததால் அவற்றைத் தட்டியடக்குவது இந்திய ஆளும்வர்க்கத்திற்கு சிரமமானதாகத் தெரியவில்லை. இலங்கையின் சர்வதேச முக்கியத்துவம் அதன் நடுநிலைமீதும் அணிசேரா இயக்கத்தின் சாவதேச முக்கியத்துவம் அதன் நடுநிலை மீதும் அணிசேரா இயக்கத்தில் இலங்கை பற்றிய உயர்வான அபிப்பிராயத்தின் மீதும் தங்கியிருந்தது. எனவே இலங்கையை

www.tamilarangam.net

வேறு விதமாகவே கையாளும் தேவை ஏற்பட்டது.

1973க்குப் பின்னர் எண்ணெய் விலை அதிகரிப்பும் எரிபொருட் தடடுப்பாடு பற்றிய அச்சங்களும் எண்ணெய்க்கான தேடல முயற்சியை துரிதப்படுத்தின. பாக்கு நீரிணையிலுள்ள தீவுகளில எண்ணெய்வளம் இருக்கலாம் என்ற எதிர்பாரப்பு கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்தமை இலங்கையின் இராஜ தந்திரத்தின் வெற்றி எனக் கருதப்பட்டது. ஆயினும், உண்மையில இலங்கையின் இழப்புகள் கச்சதீவைப் விடப்பெரியவை. பாக்குநீரிணையில உள்ள எண்ணெவளம் பற்றிய ஆய்வுகள் ஏற்கனவே இந்தியாவால மேற்கொள்ளப்பட்டு கச்ச தீவில எண்ணெய் வளம் இல்லை என்பது ஓரளவு உறுதியாக்கப்பட்ட பின் கள்ளக் கடத்தலகாரருக்கு வசதியாக இருந்த ஒரு தீவை இலங்கை அரசிடம் அளிப்பதில இந்தியாவுக்கு ஒரு பெரிய இழப்புமில்லை. மறுபுறம் வடபிரதேச மீனவர்கட்கு இந்தியாவின் தென் எல்லைவரையிலான கடலில் மீன்பிடிக்கும் பாரம்பரியமான உரிமைகள் காலவரையறையற்று இருந்தன. இலங்கை இந்திய எல்லை உடன்படிக்கை திட்டவட்டமான எல்லையை வகுத்ததன் மூலம் இந்த உரிமைகள் வரையறுக்கப்பட்டன. இது வடபிரதேச மீனவர்களது நீண்டகாலப் பார்வையில ஒரு இழப்பேயாகும்.

பிராந்திய அரசியலில ஏற்பட்ட அடுத்த முக்கியமான திருப்புமுனை 1977ல இலங்கையிலும் இந்தியாவிலும் ஏற்பட்ட அரசியல மாற்றங்கள் எனலாம். 1977ல U.N.P. அமோகமான பெரும்பான்மையுடன் அதிகாரத்துக்கு வந்த காரணங்களுள் முக்கியமானது 1970இல கிடைத்த பெரும்பான்மையால ஏற்பட்ட மிகையான தன்னம்பிக்கையின் விளைவாக ஐக்கிய முன்னணி அரசு இழைத்த தவறுகளே. சிறு முதலாளித்துவம் நகரநடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரை மட்டுமென்றித் தேசிய சிறுபான்மையினரையும் பகைக்கும் செயலகளில ஸ்ரீ.ல.சு.க.

www.tamilarangam.net

மட்டுமின்றி அதன் பாராளுமன்ற இடதுசாரித் துணைவர்களும் இறங்கினர். 197576 இல் ஐக்கிய முன்னனி அரசில் உட்பூசலின் விளைவாக வெளியேறிய இரண்டு இடதுசாரிக் கட்சிகளும், ஸ்ரீ.ல.சு. கடசியில் இருந்த சோவியத் சார்பு இடதுசாரிகளும்; 1977ல நடந்த தேர்தலில் ஸ்ரீ.ல.சு. கட்சியையே மும்முரமாகத் தாக்கினர். இதன் விளைவாக ஸ்ரீ.ல.சு.க. படுதோல்வி கண்டது. அதைவிட மோசமான தோல்வியும் அழிவும் பாராளுமன்ற இடதுசாரிகட்கு ஏற்பட்டது.

இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்களோ ஜனதா ஆட்சியின் ஒற்றுமையீனத்தாலும், கையாலாகாத்தனத்தாலும் இரண்டு வருடங்கட்குள் மீண்டும் இந்திராகாந்தியை ஆட்சிக்குள் கொண்டுவந்தன. இலங்கையின் அயற்கொள்கையை மேலைநாடுகட்குச் சாதகமானதாகத் திருப்பி, அவர்களது தயவில் இலங்கையை இன்னொரு "சிங்கப்பூராக "மாற்றமுற்பட்ட ஐ.தே.க. ஆட்சி இலங்கையின் அணிசேராக் கொள்கையை பலவீனப்படுத்தி அமெரிக்காவுக்கு அனுசரணையாக நடந்தது மட்டுமன்றி இஸ்ரேலுடனும் தொடர்புகளை விருத்தி செய்து அரபுநாடுகளது நட்பையும் பலவீனப்படுத்தியது. (இறுதியில ஏகாதிபத்திய விரோதப் போராட்டங்கட்கு ஆதரவு தருவதில் முன்நின்ற இலங்கை அரசு, தென்ஆபிரிக்க நிறவெறி அரசைக் கண்டிக்கவும் தயங்கும் இழிநிலைக்கு இறங்கியது.) இலங்கையில அமெரிக்கத் தளங்களை இரகசியமாகப் புகுத்தும் முயற்சியில சீனக்குடாவில எண்ணெய்க் குதங்களை அமெரிக்காவிற்குக் குத்தகைக்கு விடும் ஏற்பாடு; பின்னர் குதங்கள் ஏலம் விடப்பட்டபொழுது, இந்தியா போட்டியிட்டு அதிக விலை கேட்டதன் மூலம் கைவிடப்பட்டது. இலங்கையினுள் தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்கலும், தேசிய ரீதியாக ஜனநாயகத்தின் பலவீனப்படுத்தலும் ஐ,தே.க. அரசங்கத்தின் நிலையை உள்ளிருந்து பலவீனப்படுத்தின. அயல்நாட்டுக் கொள்கையாலும், உள்நாட்டு அரசியற்

www.tamilarangam.net

நடத்தையாலும் தன்னைத்தானே பலவீனப்படுத்தி தனிமைப்படுத்திக் கொண்ட ஐ.தே.க. ஆட்சி, 1983 இனக் கொலைகட்கு முன்னரே இலங்கையில் இந்தியத் தலையீட்டுக்கு வசதியான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது.

1983க்குப் பின் இந்தியாவின் தலையீடு பற்றி அபிப்பிராய வேறுபாடுகள் பல உள்ளன. இவற்றுட் பல தமிழ்நாட்டு மக்கள், தமிழ்நாட்டு மாநில அரசியற் கட்சிகள், இந்திய அரசாங்கம் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளைப் பற்றிய தெளிவீனங் காரணமாகவை. 1983ல் தமிழ் அரசியலவாதிகளும் 1984 ஐ அடுத்துப் பெருந்தொகையான அகதிகளும் இந்தியாவில் தஞ்மடையும் வரை இந்திய அரசாங்கம் காத்திருக்கவில்லை. த.வி.கூ. இந்திய அரசாங்கத்துடன் அதற்கு முன்னரே தொடர்பு வைத்திருந்தது. ஐ.தே.க. அரசாங்கத்தின் பகைமையான போக்கு; இந்திய அரசாங்கம் பழிவாங்க ஒரு சந்தர்ப்பத்தை எதிபார்த்திருக்க தூண்டியது. 1947ல் மலையக மக்கள் குடியுரிமை மறுக்கப்பட்ட போது இந்தியா காட்டாத கவலையும், 1958 இன வன்முறையின் போதும், அதைவிடப் பன்மடங்கு உக்கிரமாக 1977ல் நிகழ்ந்த வன்முறையும்,அதைத் தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்களும் எழுப்பாத கரிசனையும் 1983ல் ஏற்படக் காரணம் 1983ல் இந்தியா இலங்கை அரசைத் தன்கைக்குள் கொண்டுவரும் நோக்கம் கைகூடும் சாத்தியப்பாடு இருந்தமையே.

இந்தியா வங்காளதேச விடுதலையின் பாடங்களை ஒரு பெருவல்லரசின் கண்ணோட்டத்தினின் நின்றே கற்றது. எனவே அந்த நோக்கிலேயே இலங்கைத் தமிழர் பிரச்சினையையும் ஈழவிடுதலைப் போராட்ட இயக்கங்களையும் கையாண்டது. விடுதலை இயக்கங்களுக்கு ஆயுத உதவியும் பயிற்சியும் தந்தபோதே இந்தியா இலங்கையின் உள்விவாகரத்தில தலையிட்டாயிற்று. இவ் விடுதலை இயக்கங்கள் மத்தியில் வேறுபாடுகளைப் பேணி ஒன்றை

www.tamilarangam.net

இன்னொன்றின் மூலம் அடக்கியாளும் முயற்சியில இந்தியாவின் நோக்கம் மனிதாபிமான உணர்வு சார்ந்ததல்ல என்பது தெளிவாயிற்று. இந்திய அரசாங்கத்திற்கும் தமிழக அரசியற் கட்சிகளுக்குமிடையிலான கருத்து வேறுபாடுகளையும் தமிழக மக்களது அனுதாபத்தையும் பயன்படுத்தி தம் அரசியற் சுதந்திரத்தைப் பேணிய விடுதலை இயக்கங்கள் ஒரு சிலவே. தமிழக அரசின் தயவற்ற மார்க்சிய லெனினிசிய சார்புடைய சிறு இயக்கங்கள் மீது இந்திய அரசின் கண்காணிப்பும், கட்டுப்பாடும் அதிகாமாகவே இருந்தது.

இந்திய அரசாங்கம் விடுதலை இயக்கங்கட்கு பயிற்சியும், ஆயுத உதவியும் அளித்த போதும் ஈழப்பிரிவினையை ஆதரிப்பதாக எந்நிலையிலும் பகிரங்கமாக கூறவில்லை. ஆயினும் அந்த எதிர்பார்ப்பு இந்தியாவுடன் நெருங்கிய உறவுடைய இயக்கங் களிடையே இந்திய அரச இயந்திரத்தின் சில பகுதிகளால ஊக்குவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்களது விடுதலைப் போராட்டம் ஒரு வெகுஜன இயக்கமாக வளர்வதை முன்வரிசை விடுதலை இயக்கத் தலைமைகளும் விரும்பவில்லை. அவர்களது இந்திய போஷகர்களும் விரும்பவில்லை. போராட்டத்தின் நீடிப்பு அதன் விரிவடைதலையும் வெகு ஜனங்களின் பங்குபற்றலின் விஸ்தாரிப்பையும் அவசியமாக்கியிருக்கும். அந்த நிலையில இந்தியாவின் முக்கியத்துவமும், சில இயக்கங்களது ஏகபோகமும் சிதையுமாதலால துரிதமான ஒரு தீர்வு; இந்திய இலங்கை அரசாங்கங்கட்கும், முன்வரிசை விடுதலை இயக்கங்கட்கும் அவசியமாயிற்று இயக்கங்களுக்கிடையான மோதல்கள் ஆதிக்கத்துக்கான மோதல்களாகவே இருந்தவேளை இந்திய இலங்கை அரசாங்களிடையிலான முரண்பாடு இந்திய மேலாதிக்க வாதத்திற்கும் சிங்களப் பேரின வாதத்திற்குமிடையிலான

www.tamilarangam.net

போட்டியாக அமைந்தது. 1987இல இலங்கை அரசாங்கம் வடக்கிற்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்பாமல் மறித்த நடவடிக்கையை அடுத்து இந்தியா கப்பலகளை அனுப்பி அடைந்த அவமானத்தைப் போக்க விமானமூலம் பொதிகளை இறக்கியதேயொழிய அத்தியா வசியப் பொருட் தட்டுப்பாட்டைத் தீர்க்க அல்ல எவ்வாறுயினும் இந்திய நடவடிக்கை மொத்தத்தில இலங்கை அரசுக்கு ஒரு தெளிவான மிரட்டலாக அமைந்தது. இதன் விளைவாகவே பேச்சுவார்த்தைகளும் இந்திய இலங்கை உடன்படிக்கையும் உருவாகின இதன் மூலம் இந்தியா தேசிய இனப் பிரச்சனைக்கு ஒரு இடைக் காலத்தீர்வை மட்டுமே சாத்தியமாக்கியபின் அது வரவேற்கத்தக்கது. மாறுக, இந்தியா இலங்கைமீது தன் ஆதிக்கத்தை வலியுறுத்துமாறு சில நிபந்தனைகளையும் புகுத்தியது.

இந்த உடன்படிக்கையையடுத்து இந்தியாவின் நிலைப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கு அனுதாபமான ஒன்றுக மாறியது. தன் ஆணைக்கு உட்பட மறுத்த விடுதலைப் புலிகளின் மீது இந்தியா கட்டவிழ்த்த தாக்குதலும் இந்திய ராணுவம் செயற்பட்டுவந்த முறையும் தமிழ் மக்களின் மீதான கருணையினுல் இந்தியா செயற்படவில்லை என்பதையே உணர்த்துகின்றன. உடன்படிக்கையின் சிலபகுதிகள் பேரளவில நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளவெனினும் சாரம்சத்தில பிரச்சனை தீர்க்கப்படாமலேயே உள்ளது தென்னிலங்கையில எழுந்த இந்திய அரசாங்க விரோத உணர்வின் பரிமாணத்தை இந்திய அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. தன்னுடைய தயவில மட்டுமே இலங்கையின் தேசிய ஐக்கியத்தைப் பேணக்கூடிய இலங்கை அரசையே இந்தியா விரும்பியது

(தொடரும்)

www.tamilarangam.net

# கடலுடன் மோதும் கல்லறைகள்

காலம் காலமாக நம்நாட்டில்
தத்துவம் தத்துவமாக
ஆனால்
மனிதன் மனிதனாக!

உயிர்கள் கருவறையில் விதைக்கப்பட்டு
உடல்கள் நம் வீட்டு அறையில் நுழையும்போது
கல்லறை பார்க்கப்புறப்பட்டவன்
கடற்கரை ஓரம் கல்லறைகளில்
காலை பொழுந்த தொலைத்ததினால்
கடற்கரைகாற்றுடன் கை கோர்த்து
கடல் அலையின் மைந்தனுடன்
கண நேரம் கலந்து கொண்டேன்

தென் திசை ஓரம் நெருக்கடியாம்
சகோதரர்களுடன் படுத்துறங்க
மறுகரை நோக்கி இடம்பெயர்ந்தானாம்.

காற்று வந்து காதோரம் சொன்னது
கடல் அரிப்பை தடுக்க
நாட்டை சுற்றிய
கல்லறைகள் போதும்.

www.tamilarangam.net

# படிப்பறிவுள்ள பாட்டாளியின் கேள்விகள்

ஏழு நுழைவாயில்கள் கொண்ட தேபன்
நகரைக் கட்டியது யார்?
வரலாற்றுப் புத்தகங்களில் உள்ளன அரசர்களின்
பெயர்கள்.
அரசர்களா சுமந்து வந்தனர் கட்டிட
வேலைகளுக்கான
கற்களை?

பல முறை நிர்மூலமாக்கப்பட்டது பாபிலோன் நகர்.
மீண்டும் மீண்டும் அதை நிர்மாணித்தவர் யார்?
பொன் கதிர் வீசும் லிமாநகரத்தில் எவ்விதமான
வீடுகளில் வாழ்தனர் தொழிலாளிகள்?
மாலையில் எங்கே சென்றனர் சீனச்சுவர் கட்டி
முடிந்தும் கொத்தர்கள்?

மாபெரும் ரோம் நகரத்தில் எங்கும் வெற்றி
வளைவுகள். அவற்றைக் கட்டியவர் யார்?
யாரை வென்றனர் சீஸர் பேரரசர்கள்?
பெருமளவில் புகழப்பட்ட பைஸான்ஸ்நகரத்தில்
குடிமக்கள் எல்லோரும் மாடமாளிகைகளிலா
இருந்தனர்!

இதிகாசப் புகழ் அட்லான்டிஸ்ஸைக் கடல்
விழுங்கிய இரவில் கூக்குரல் இடவில்லையா
மரணத்தின் பிடியிலிருந்தோர் - அடிமைகளின்
உதவியைநாடி.
காளை அலெக்ஸான்டர் இந்தியாவை வென்றான்.
அவன் தனியாகவா?
அப்போது ஒரு சமையல்காரன் கூடவா
இல்லை அவனோடு?

www.tamilarangam.net

ஸ்பெயின் நாட்டு அரசன் அழுதான், அவனுடைய
கப்பல் சாகரத்தில் மூழ்கும்போது வேறுயாருமே
அழவில்லையா?
இரண்டாவது பிரடரிக் ஏழு ஆண்டுப் போரில்
வென்றான். அவனைத் தவிர வேறு யார்
வென்றார்கள்?

ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு வெற்றி.
வெற்றி விழா உணவு சமைத்தவர் யார்?

"பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு மாவீரன்"
இவர்களின் செலவுக்கு முதலீடு செய்தவர் யார்?
கணக்கில் அடங்கா சாதனைக் கட்டுரைகள்
கணக்கில் அடங்கா கேள்விகள்.

நன்றி "இனி"

---

# வரப்பெற்றோம்...

## பெண்களின் சுவடுகளில்...

இது பெண்களின் வரலாற்று மூலங்களை நோக்கிய ஒரு தேடல். பெண்களின் பரிணாம வளர்ச்சியை ஆராயும் இந்நூல், ஈழத்தின் எழுத்தாளர் சாந்தி சச்சிதானந்தத்தின் பாராட்டுக்குரிய முயற்சி.
வெளியீடு: "தமிழியல்"

## பெருஞ்சிறையில் வாடும் பனிக்குருவிகள்

ஈழத்துப் பிராமணர்களின் வாழ்வின் பிரச்சனைகளின் ஒரு பகுதியை சித்தரிக்கும் நாவல். ஈழத்து பிரபல எழுத்தாளர் தெணியான் எழுதி "முரசொலி"யின் வெளியீடு.

---

www.tamilarangam.net

## ஈழத்திலிருந்துஒருகடிதம்:

**நண்பா!**

காலத்தின் கசப்பான நிகழ்வுகளினால்
எனக்கும் உனக்கும் இடையில் ஓர்
நிரந்தரம் அற்ற பிரிவு
இருப்பினும்
உனது மேற்குலகப்பிரவேசம்
உனது வர்க்கநிலையை சார்ந்துள்ளது
மேற்குலகில் ஏற்படும் காலநிலைமாற்றங்களுக்கு
மக்கள் ஈடுகொடுக்க பழகியது போல்
நம் நாட்டில் ஏற்படும் அரசியல்(கட்சி)
மாற்றங்களுக்கு நம் மக்கள் ஈடுகொடுக்கப் பழகிவிட்டனர்,
ஆனால் உங்கே ஓர் நிரந்தரமற்ற
கோடை விடுமுறையை விரும்புகின்ற மக்களும்,
இங்கே ஓர் நிரந்தரமான மாற்றத்தை விரும்பும் மக்களும்,
இருப்பதை நீ உணர்ந்திருப்பாய்
கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை
வைத்திருக்கும் மேற்குலகம்
கண்டம் விட்டு கண்டம் தாண்டி வந்த நம்
மக்களையும் வைத்திருக்கும்போது
என் நாட்டு மக்கள் மீது எனக்கு....?
நாட்டில் இருந்து அன்னியப்படை
வெளியேறிமுடியும்நிலை,
இதில் அடித்து விரட்டப்பட்டார்களா?அல்லது அவர்களாக
வெளியேறினார்களா?
என்ற விவாதங்கள் இன்று மக்கள் முன் நிற்கிறது
எதுவாக இருந்தாலும் என்றோ ஒருநாள்
அவர்களின் மண்ணில் இருந்தும்
அந் நாட்டு மக்களால் அன்னியப்படுத்தப்படுவர். இது அந்
நாட்டு மக்களின் தேவையை நோக்கிய செயற்பாடாக
இருக்கும்.
எனவே
மீண்டும் மீண்டும் மக்கள் வெற்றி கொள்வர்.
நன்பா!
மீண்டும் பழைமை வாதிகள் சிலர் பழைய
பஞ்சாங்கத்துடன்...
பழைமைகளை
பாடை கட்டுவோம்
வா!

**உனது வார்த்தைகளை எழுத்தில் பதிக்காது**
**உனது வலிமை மிகு கால்களை மீண்டும்**
**எம் மண் மீது பதி.**

www.tamilarangam.net

**ஆசிரியர்**
**தேடல்,**

89 மார்கழி இதழில் "நாடோடி" என்பவரின் கடிதத்துக்கு கட்டுரையை எழுதியவர் என்ற முறையில் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வடமேல மாகாணத்து மக்களில் 1930 அம் ஆண்டு தமிழ் மொழி மூலமான பாடசாலைகள் எத்தனை என்றும் 1940 ஆம் ஆண்டு தமிழ் மொழி மூலமான பாடசாலைகள் எத்தனை என்றும் அறிய நாடோடி முயற்சித்தால் நல்லது. இந்தப்பகுதி பாடசாலைகள் யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது என்றும் அவர் ஆராய்ந்தால் பெறுமதியான தகவல்கள் கிடைக்கும். எனது கட்டுரையை இவர் நன்றாகப் படித்தால் அர்த்தம் புரிந்திருக்கும். வரலாறு என்பது தங்கள் வசதிக்காக திரிபுபடுத்தி எழுதி அதையே உண்மையெனக்காட்ட முயற்சிக்கும் எமது ஆங்கிலம் படித்த கனவான்கள் (கிறிஸ்தவ உயர் பீடர்கள் உட்பட) தேசியத்தை வளர்த்ததாக நாடோடி கூறுகிறார். இனவாதத்துக்கும் ,தேசியவாதத்திற்கும் வேறுபாடு என்ன என்பதை நாடோடி முதலில் அறியட்டும். கிறிஸ்தவ பீடர்கள் மேற்கு நாட்டு(எம்மை ஆண்டவர்கள்) கட்டுபாட்டில் உள்ளவை. வத்திக்கான் போப்போ, ஆங்கிலத் திருச்சபையின் தலைவரோ (எலிஸபெத் மகராணி) அரசியல் பிரமுகர்கள் அல்ல என்று இவர் கூற முற்படுகிறாரா தெரியவில்லை. கிறிஸ்தவப் பிரச்சாரகர்கள் தமிழ் படித்தமையால் அவர்களும் அவர்களுடைய தலைமைகளும் ஆதாயம் பெற்றார்களா அல்லது நாட்டு மக்கள் ஆதாயமடைந்தார்களா என்று தெரியப்படுத்தினால் நல்லது. ஆங்கிலம் படித்தவர்கள் வகுப்பு வாதத்தைக் கிளப்பி ஆதாயம் தேட முற்பட்டார்கள். தேசியம் என்பதை விட ஆங்கிலம் படித்துவிட்டு அடிமைக் கௌரவம் பேணி தமிழின் மகிமையை குறைக்கத்தான் இந்தக் கனவான்களால் முடிந்தது. தமிழில் எழுதுவது, பேசுவது என்பன யாழ்ப்பாணத்தில் இன்றும் கேலிக்கிடமாய் உள்ளது என்ற உண்மையை நாடோடி அறிவார் என்றே எண்ணுகிறேன். தமிழின் பெயரால் மோசடி செய்து ஆதாயம் தேடிய "ஆங்கிலம் படித்த கனவான்கள்" தமிழரை அடக்கி ஆண்டவர்களுக்கு உதவினார்களே ஒளிய தமிழையே படித்து தமிழையே பேசிய மக்களுக்கு எதுவித உதவியும் புரியவில்லை. வடமேல மாகாணத்தைப் பற்றி எழுதிய செய்திகள் இவருக்கு சிரிப்புக்கிடமாய் இருப்பதாக கூறுகிறார். ஹாஸ்யம் ஏதும் அந்த கட்டுரையில் எழுதப்படவில்லை என்பதை நன்கு படித்தால் புரியும்.

**சங்கரி.**

www.tamilarangam.net

# எல்லைதாண்டா அகதிகள்

யட்டவத்தை தோட்டத்து லயத்தை அடிச்சி, நொருக்கி நெருப்பு வைச்சி, லயத்தில் இருந்தசாமான் சட்டு முட்டுகள தூக்கிட்டு போயிட்டானுக. லயத்தில் இருந்த ஆளுக புள்ள குட்டிகளோட காட்டுக்குள்ள ஓடி மறைஞ்சிட்டாங்க... தோட்டத்து தொரை எந்த நடவடிக்கையும் எடுக்கலியாம்... எல்லாம் முடிஞ்சோன்ன தோட்டத்து லொறியில ஆள்கள ஏத்தி மாத்தளை மாரியம்மன் கோயில இறக்கிவிட்டுட்டு போயிட்டாரு. இம்புட்டும் செஞ்சதும் யார் தெரியுமா? யட்டவத்த தோட்டத்துக்கு போற சந்தியில இருக்கிற கடைக்காரன் மகன் தான்!மேல் மூச்சுகீழ்மூச்சு வாங்க ஓடிவந்த வேலு பதறியடி சொன்னான்... அவன் சொன்னது அத்தனையும் உண்மை! நடந்ததை நேரில் பார்த்தவன்... கண்கள் பார்த்ததை வாய் வெளிப்படுத்துகின்றது.

ஒரு வட்டம் போட்டது போல் வேலுவைச் சுற்றி ஒரு கூட்டம்... அதில் சிங்காரம் ஆண்டிக்கிழவன் - என்று ஒரே தோட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இந்த பக்கத்தில் இருந்த ஒரே ஒரு தோட்டத்தையும் எரிச்சிட்டானுகளே! கவருமெண்டும் ஒரு நடவடிக்கை எடுக்கல்ல... இது ஆண்டிக்கிழவனின் அறுபது வருட அனுபவ முத்திரை.

இதுக்குத்தான்யா இந்தியாவுக்கு போயிடுவோம்னு சொன்னேன். எவன் கேட்டான்!...உழைப்பில் தேயிலைக் காட்டுக்கு ஒரு பரம்பரையைத் தியாகம் செய்த பிரதிநிதியின் குரல்!

அட நீ ஒண்ணு ஏதாச்சும் கலவரம்னதும் இந்தியாவுக்குபோயிடுவோம்னு சொல்லுவீங்க கலவரம் முடிச்சோன்ன அதை மறந்திடுவீங்க... ஒரு நெலையான பேச்சு நம்ம ஆளுகளுக்கு இல்ல... அதனால்தான் அடிவிழுது இது ஒருத்தன்.

இந்த நாட்டுலதான் எங்க பாட்டன் பூட்டன் ஒழைச்சான்! தேயிலை தாளுக்கு அடியில தான் அவங்கள புதைச்சோம் ! நாங்க ஏன் இந்த நாட்டை விட்டு போவேனும்? ஒருத்தரும் போகக்கூடாது... தன்னை மறந்து சிங்காரம் ஆவேசமாக சொன்னான்...

ஆமாம் இவரு ஏன் இப்படி சொல்லமாட்டாரு? வீட்டுல சிங்களத்த வைச்சிட்டு வெளியில வீராப்பா பேசுகிறாராக்கும்...

**மாத்தளை சோமு**

இவருக்குத்தான் இந்தியா போக முடியாது! இந்தியாவில இவனே எவன் ஏத்துக்குவான்?

சிங்காரத்தை தாக்க வேண்டும் என்று காத்திருந்தவனின் தாக்குதல். என்னடா சொன்ன என்று சிங்காரம் அவனோடு மோதப் போன போது பக்கத்தில் இருந்தவர்கள் குறுக்கிட்டு அந்த சண்டையை அப்படியே அடக்கிவிட்டார்கள்.

சிங்காரம் நெஞ்சில் சுமையேறியவனாக தலை குனிந்திருந்தான்... ஆண்டிக்கிழவன் அவனை ஆறுதல் படுத்துவது போலவும் மற்றவர்களுக்கு பதில் சொல்வது போலவும் பேசினான்.

"சிங்காரம் அவளை கட்டிக்கிட்டு ஒரு வருசமாச்சி! இன்னைக் அவ சிங்களத்தி மாதிரியா இருக்கா! அந்தகதையெல்லாம் இப்ப எதுக்கு.....? நடக்கிற வேலைய பாருங்க.. ஷீம் ஆயிரம் கலவரம் வந்தாலும் நம்மளுக மத்தியில ஒத்துமை வருமாங்கிறது சந்தேகம் ஆண்டிக்கிழவன் உள்ளதை நல்லதை சொல்லி அந்தபேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பார்த்தான்.. முடியவில்லை..அடுத்த கேள்வி வெடித்து விட்டது!

"அதுசரி தாத்தா! ஏன் சிங்காரத்துக்கு சப்போட்பன்னனும்..? நம்ம லயம் எரிந்ததற்கு அவன்தான் காரணம் ..! அவன் சிங்களத்தியை கட்டப் போயி அவன் தம்பிலயத்துக்கு நெருப்பு வைச்சான்! " என்று ஒருத்தன் பேச்சை நீட்ட போனபோது கிழவன இடைமறித்தான்...

"நம்ம லயம் நீ சொன்ன மாதிரி சிங்காரத்தினால எரிஞ்சதுன்னு வைச்சிக்குவோம் அப்படின்னா மத்த லயம் யாரால எரிஞ்சிச்சி? இது எல்லாம் நம்ம தலையெழுத்தினால நடக்குது யாரையும் கொறை சொல்லி பிரயோசனம் இல்ல... என்னைக்கி வெள்ளக்காரனை நம்பி இந்தியாவுல இருந்து வந்தோமோ... அன்னை இருந்துதான் இந்த பிரச்சனை!... வெள்ளக்காரன் நமக்கு ஒரு முடிவு காட்டாம சீமைக்கு போயிட்டான் அந்த நேரமே நாம ஒரு முடிவை வெள்ளக்காரனுக்கிட்ட கேட்டிருந்தா இன்னைக்கி நாம நிம்மதியா வாழ முடியும். நாங்க இந்தியாவில இருந்து வந்தாலும் இந்த ஊரையே தாய் நாடாநெனச்சோம் சிலோன் பூரா பஸ் ரெயில் ரோடுபோட்டது நம்ம ஆளுகதான்... அதில எத்தனையோ பேரு செத்துப்போயிட்டாங்க...

சிங்கமலை சொரங்கத்து சுவர்ல போயி பார்த்தா இந்த ரோடு போட்டதில எத்தனை பேர் செத்தாங்கிறது தெரியும்! அப்படி நம்ம ஆள்க உசுரை குடுத்து ஒழைச்ச நாடு இது...! ஏன் இந்த நாட்டை விட்டு நாங்க போவேணும்!... கிழவன் அதே தோட்டத்தில் பிறந்து, கங்காணியாகி தலைவராகி இன்று முதிர்ந்து உதிரத்தயாராக இருப்பவர். எவரும் அவருக்குத் தெரியாமல் அங்கே பிறந்ததில்லை திருமணம் செய்வதில்லை! அவருக்கு எந்த கட்சியின்மீதோ-சங்கத்தின் மீதோ தனிப்பட்ட பற்றுதல் கிடையாது ஆனால் அங்கே நடக்கிற எல்லாவற்றிலும் அவர் இருப்பார்.

www.tamilarangam.net

ஆண்டிக் கிழவன் கேட்ட கேள்விக்கு எவரும் பதில் கொடுக்காததால் அவனே அந்த வாக்குவாதத்தை முடித்து வைத்தான் சரி...சரி... போங்க... பேச்சுநீட்டவேணும் ...! சிங்கரம் நீ யோசிக்காதே ...! அதெல்லாம் அப்படித்தான்... தைரியமா இரு!

அந்தக் கூட்டம் மெல்ல கரைந்து போயிற்று... சிங்காரம் ரொம்பவும் சோர்ந்துபோய் அகதிமுகாமிட்ட கோயிலின் உள்ளே போனுன்... அவன் மனம் மழை இல்லாத தேயிலைச்செடியாக கருகி விட்டது... தான் சிங்களப் பெண்ணுன மாலினியை கல்யாணம் செய்ததை இத்தனை நாளும் நெஞ்சில் அடக்கி வைத்து குத்திக்காட்டிவிட்டான்...! மாலினி சிங்காரத்தைக் கைகோர்த்து ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது...அதை இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறுனே...! அதேநேரத்தில் அவன் சொன்னதில் சில உண்மைகள் இருக்கத்தான் செய்கிறது! அன்று அந்த லயத்திற்கு நெருப்பு வைத்தவன் மாலினியின் அண்ணண்தான்... அவன் கையில்தான் தீவட்டி இருந்தது...!

தன்ஞல்தான் அந்த லயம் எரிந்துவிட்டதோ!... அவன் மனம் எங்கோ பள்ளத்தில்...விழுந்து கொண்டேயிருந்தது... சடாரென்று ஒரு நினைவு வெட்டி மறைந்து... அவர்கள் காதல் உச்சக்கட்டத்தில் இருந்த காலம்... அந்தக் காதல் விவாகம் எப்படியோ அப்பா காதில் விழுந்து விட்டது... அவர் அவனிடம் நேரிடையாக கேட்டார்... சிங்காரம் யோசித்தான் ...இப்போது பொய் சொன்ஞலும் பிறகு எப்போதாவது உண்மையைக் "கக்க" வேண்டிவரும் ! அதனுல் நிஜத்தை... ஆம்...! சிங்காரம் தான் மாலினியைக் காதலிப்பதாக சொன்னுன்...

அவ்வளவுதான்... அவர் இதயம் ஸ்டோர் அடுப்பாக கொதித்தது..... இனி நீ எனக்கு மகனில்ல... இனிமே இந்த காம்புராவுல கால் வைக்காதே! என் மூஞ்சியில முழிக்காதே!...

சிங்காரம் மறு பேச்சில்லாமல் அந்த காம்புராவை விட்டு போய் துரையிடம் சொல்லி வேறு காம்புராவில் குடியேறி தன் புதுக்கதையை தொடங்கினுன்... அதற்கு அடுத்த வாரம் மாலினியை பக்கத்து டவுன் பொலிஸ் ஸ்டேசனுக்கு கூட்டிப்போனுன் அவன்... அங்கே இருவரும் ஒருவரை ஒருவர் காதலிப்பதாகவும் திருமணம் செய்ய விரும்புவதாகவும் முறைப்பாடு செய்து கையெழுத்திட்டு வந்தார்கள்... சாதி-சமயம்-மொழி என்ற வட்டத்துக்குள் வட்டமடித்து வாழ்ந்த மாலினியின் பெற்ருேர்கள் - அவருடைய சகோதரர்கள் அந்த தமிழ் இளைஞன் சிங்கள நங்கை திருமணத்தை முறியடிக்க வந்து சட்டத்திற்கு முன்ஞல் சரணடைந்து போனுர்கள்...

சிங்காரத்தோடு கைகோர்த்த மாலினியைப் பார்த்து அவளின் அண்ணன் நெருப்பாய் வார்த்தைகளைக் கக்கினுன்...

தமிழ் பயலோடயா போற... போ? உன்னையும் அவனையும் கவனிசிக்கிறேன்... அன்று சொன்னதை இன்று செய்து விட்டானே?... சிங்காரத்துக்கு யோசனை யோசனையாக வந்தது... கல்யாண மண்டபப்

பக்கம் போனுன் மாலினி கலங்கிய கண்களுடன் அவனருகே வந்து நின்முள். அவன் மௌனமாக இருந்தான். ஒட்டிப் போயிருந்த அவன் உதடுகள் பிரியவில்லை...

மாலினிக்கு ஒன்றுமே புரியவில்லை... அவன் தோளில் சாய்ந்து அழுதாள்... அவளின் கண்ணீர் துளிகள் அவன் மார்பை நனைத்தது. ஆனுல் உன் நெஞ்சை அது நனைக்கவில்லையே!...

சிங்காரத்திற்கு மாலினியைப் பார்க்கிறபோதெல்லாம் அவளுடைய அண்ணனின்" நினைவுதான் வருகிறது அதனை அவனுல் தவிர்க்க முடியவில்லை...

மெல்ல அங்கிருந்து நழுவி கூட்டத்தில் கலந்து தேரடிக்கு வந்தான் சிங்காரம்... தேர்க் கூடாரத்தை அவன் தட்டிப்பார்த்தான்... மாசி மகத்தில் ஓடுகிற தேர் அலங்கரிக்காத மணப்பெண்ணுக நின்றது.

ஒரு கணம் நினைவுக்குள் விழுந்து திரும்பினுன் அவன்...அந்த மைதானம்... மாசி மகத்தில் நகர்வலம் போகிற பஞ்சரதங்களும் நிற்கிற மைதானம்... அங்கே கலர் கலராய் பூக்கள் பூத்துவிட்டது போன்ற மக்கள் கூட்டம்... அந்த மக்களிடையே காவடி - கரக - பொய்க்கால் - குதிரை இன்னும் பல கோஷ்டியினரின் ஆட்டபாட்டங்கள் - வானத்தில் எதிரொலிக்கிற மாதிரி முழங்குகிற வாத்தியங்களின் இசை - அலங்கார பல்புகளின் மினுக்கங்கள் - அரகரா கோசல்கள் ஆகியன கவிஞர்கள் சொல்கிறமாதிரி அந்த இடத்தை தேவலோகமாக்கியிருக்கும்! இன்று? ஓ...அந்த மைதானம் அகதி முகாமாகிவிட்டது!

சிங்காரம் அந்த சித்திரத் தேரில் தொங்குகிற சிறுமணி ஒன்றை அசைத்தான்... அப்போது அதிலிருந்து கிளம்பிய ஓசையில் கிளர்ந்த நினைவு கூடையில் விழுகிற கொழுந்தாக அவன் நெஞ்சில் விழுந்தது...

மாலினியும் சிங்காரமும் அந்த கோயிலுக்கு வந்தபோது அந்த தேரைப் பார்த்தார்கள்...அன்று சாதாரண நாள் எவரும் இல்லை... அவன் அந்த தேரின் மணியை அசைத்துப் பார்த்தான்... கிணிங்...கிணிங் என்று அசைந்து ஒரு இதமான ஓசையைக் கொடுத்தது அந்த மணி... மாலினி தானுக அந்த மணியை அசைக்கப்போனுல்... அவளுக்கு எட்டவில்லை... அப்போது அவன் அவளின் கரத்தைப்பிடித்து இணைத்து உயர்த்தி அந்த மணியை அசைத்தான்... கிணிங்... கிணிங்...

ஓ...என்னமாய் இசைக்கிறது இந்த சிறுமணி! அப்போது அவன் சொன்னுன்... நான் தனியா மணி அசைக்கிறதை விட இப்ப வந்த சத்தம் நல்லா இருக்கு! ஏன் மாலினி கேட்டாலள்ரெண்டு பேரு கையும் சேர்ந்திருக்கே... அதனுல தான்...மாலினி வெட்கித்து அவனுடைய மார்பில் சாய்ந்தாள்... அவன் அவளை அப்படியே கட்டிப்பிடித்து முத்தமிட்டான்...

www.tamilarangam.net

எவனோ தேர்மணியை அசைக்க அவன் நினைவு அறுந்துவிழுகிறது... சிங்காரம் திரும்பிப்பார்த்தான்... அங்கிருந்தவன் நல்லசாமி... சிங்காரம்! இங்க தான் இருக்கிறியா? ஒன்னய எங்கங்க தேடுகிறது! ஒனக்கு தெரியுமா? பாம்புகள் ரோட்டு கடை மொதளாளிய வெட்டி கடையில போட்டு எரிச்சிட்டானுக... அவருட்ட மனிசியையும் புள்ளைகளையும் கெடுத்து தேயிலை தோட்டத்துல போட்டானுகளாம்...

இப்ப அவங்கள கோயிலுக்கு கொண்டாந்திருக்காங்க... சிங்காரம் ஓடினான்... அவனுக்குமுன்னால நல்லசாமி ஓடினான். இருவரும் கோயில் காரியாலயத்திற்குப் போனார்கள்... அங்கே கிழித்துப் போட்ட நாராக படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தார்கள்... இத்தனை நாளும் காத்துவந்ததை காவு கொடுத்துவிட்டதற்கு அடையாளமாக இருந்தன அவர்கள் தேகம்...

அவனுக்கு மயக்கம் வரும் போலிருந்தது... அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டார்கள்... பாம்புகல் ரோட கடை முதலாளியையா எரித்துவிட்டார்கள்? நேர்மையாக வர்த்தகம் செய்த அவரின் கரங்கள்தான் பலருக்கு அள்ளிக் கொடுத்தன... அவரையா?... ஓ... நாட்டுக்கு என்ன நடந்து விட்டது?... பெரும்பான்மை என்ற ஒரேயொரு மமதை சிறுபான்மை மக்களை அழிக்கத்தூண்டுகிறதோ! இவர்கள் என்னதான் செய்தார்கள்! இந்த மண்ணுக்காக உழைத்ததைத் தவிர வேறு எதுவுமே தெரியாதவர்கள்! உழைப்புக்கேற்ற கூலிக்காக மட்டுமே போராடியவர்கள்! இவர்களுக்கு அகிம்சைதான் ஆயுதம்! இவர்களைஏன் அடிக்கவேண்டும்?... ஓ... மண் மாதாவே! உனக்கு சாதி-சமய நிற்பேதம் தெரியாதாம்.. அப்படியானால் இந்த உழைக்கும் மக்களின் ரத்தக்கறை உன் மீது பட்டுள்ளதே... அதனை எப்படி அனுமதித்தாய்...ஓ...நீ கண்களை மூடிவிட்டாயா!

சிங்காரம் மனமொடிந்த நிலையில் அந்த அகதி முகாமின் ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்தான்... அவனுக்கு மாலினியை பார்க்கவேண்டுமென்ற எண்ணமே வரவில்லை... மாலினி அவனை அகதி முகாமில் தேடிக்கொண்டேயிருந்தாள் சிங்காரம் தன்னை ஒதுக்கி வருகிறான் என்பது அவளுக்கு மெல்ல மெல்ல புரியத் தொடங்கிவிட்டது...

ஒரு பெரிய அண்டாவைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்தது ஒரு கோஷ்டி... உண்மையில் ஒரு அண்டாவைக் குறைந்தது எட்டுபேர் தூக்க வேண்டும் ஆனால் அந்தஅண்டாவை ஐந்து பேர் தூக்கினார்கள்...

யாராவது ஓடி வாங்கப்பா... ஒதவி செய்ங்கப்பா... என்று ஒருவர் கத்தினார். அவர்களைப்பார்த்துக் கொண்டேயிருந்த சிங்காரம் டக் கென்று அந்த கோஷ்டியோடு இணைந்தான்...

www.tamilarangam.net

ஓங்க மாதிரி நெறையபேரு வந்து ஒதவி செஞ்சா நல்லாஇருக்கும்! எல்லாம் அகதியா இர்ந்திகிட்டா யாரு தம்பி தொண்டரா வேலே செய்வா? அவர் சொன்னது அவனுக்கு நியாயமாகப்பட்டது... இந்தப் பெரிய கூட்டத்தில் ஓடியாடி வேலே செய்ய நிறையப் பேர் தேவை... அதற்கு சம்பளத்திற்கு ஆள் பிடிக்க முடியாது. இங்கே தான் தொண்டர்களே உருவாக்கவேண்டும்... சிங்காரம் அந்த நிமிடத்தில் இருந்து ஒரு தொண்டராக மாறிஞன்...

சிங்காரத்திற்கு அந்த அகதி முகாமில் தொண்டராக வேலே செய்வது பிடித்திருந்தது... முகாமில் வேலே இல்லாமல் இருக்க குறிப்பாக மாலினியின் பார்வையிலிருந்து விலகி நிற்க இந்த தொண்டர் வேலே அவனுக்கு உதவியது... அன்று பகல் உணவை பரிமாறுவதில் சிங்காரமும் முரமாயிருந்தான்... அந்த நேரத்தில் சிகிச்சை நிலேயத்திலிருந்து ஒலி பெருக்கி அவனே அழைத்து... வேலேயைப் போட்டுவிட்டு என்னவோ ஏதோவென்று பதறியவாறு போஞன்.

சிகிச்சை நிலேயத்தில் பிச்சைக்கிழவன் தள்ளுவண்டியில் படுத்திருந்தான். அவன் பயந்து போஞன்... ஆண்டிக்கிழவனுக்கு என்ன ஆகிவிட்டது. சிங்காரம் கையைப்பிடித்து கலங்கிஞன். "நெஞ்சிலே திடீர்னு வலிப்பா... அடிக்கடி வர்ரவலிதான்! ரெண்டுமூணு ஊசி போட்டா சரியாப் போயிரும்.

தனக்குத்தானே கிழவன் ஆறுதல் சொன்ஞன்... இப்ப கவுருமென்டு ஆஸ்பத்திரிக்கு போறன்... நீ மாலினிய கைவிட்டுராதே!... நேத்து வந்து அழுதா... உன்னய நம்பி தாய்தகப்பனே வுட்டுட்டு வந்திருக்கா... அவளே ஏமாத்திராதே! கைவிட்டுராதே... ஆமா...சிங்காரம்! ஏன் அவளே நீ ரெண்டு நாளா பார்க்கல்ல...

அவன் பொய் சொல்லி சமாளித்தான்... ஓ இந்த பொய் எத்தனே பேருக்கு கைகொடுக்கிறது! "இல்ல... தாத்தா! இப்ப நான் இங்கே தொண்டரா வேலே செய்கிறேன். அதஞல பார்க்க முடியல்ல... சரிப்பா அவளே கைவிட்டுராதே!"

அடுத்த சில நிமிடங்களில் கிழவனே சுமந்துகொண்டு அந்த அம்புலன்ஸ் வண்டி ஆஸ்பத்திரிக்கு ஓடியது.

மறுபடியும் ஒரு நாள் ஒலி பெருக்கி அவன் பெயரைச் சொல்லி அழைத்து... சிங்காரம் பயந்துவிட்டான்... ஆஸ்பத்திரிக்குப் போன கிழவனுக்கு என்னமும் ஆகிவிட்டதோ!... சிங்காரம்கோயில் காரியாலயத்திற்கு ஓடிஞன்...

வாங்க...தம்பி...

"உங்களே நம்பி ஒரு முக்கியமான பொறுப்பை கொடுக்கப்போறன்... இங்கே வந்திருக்கிற வருகிற அகதிகளே நீங்க பேரு-ஊரு விபரம் கேட்டு பதியவேண்டும்... அதுதான் உங்கவேலே." கோயில் கமிட்டியைச் சேர்ந்தவர் சொன்ஞர்...

www.tamilarangam.net

அடுத்த சில நிமிடத்தில் வெய்யில் நெருப்பாக கொளுத்திய பாதும் கோயில் மைதானதில் மேஜை-நாற்காலி போடப்பட்டது... புதில் சிங்காரம் உதவியாளனேடு உட்காரவைக்கப்பட்டான்... காலை ன்பது மணிக்கு ஆரம்பமாகிற வேலை அந்திசாயும்வரை நீடித்தது. பூரம்பத்தில் சிங்காரத்திற்கு சந்தோஷமாக இருந்தது... போகப் போக புந்த நாற்காலி முள்ளாகத் தைக்கத்தொடங்கியது. அப்போதுதான் பரிய பதவிகள் பார்க்க அழகாக இருந்தாலும் அது முள்ளின் மேல் ிருப்பதற்கு சமம் என்பதை அவன் உணரத்தொடங்கினுன்... ருநாளைக்கு இருபது பக்கங்கள் பெயர் விபரங்களை பதிந்தான்... காயிலின் உள்ளே இருந்தவர்களைதோட்டவாரியாக அழைத்து திந்தான். அங்கு பெயர் கொடுத்த ஒவ்வொருத்தரையும் ார்த்துக்கொண்டான்...

நேற்றுவரை தோட்டங்களில் உழைத்த தொழிலாளர்கள் இன்று புகதிகளாக வந்திருக்கிருர்கள். இவர்கள் அகதிகளா? ஓ... எப்போதும் வர்கள் அகதிகள் போல்தான் இருக்கிருர்கள்... லயத்தில் ார்த்ததற்கும் இப்போதும் என்ன வித்தியாசம்? அப்படியாஞல் வர்கள் அகதிகள்தானே! ஆம் எப்போதும் இவர்கள் நிரந்தர புகதிகள்...! அவர்களுக்கு இந்த நாடு வகுத்த எல்லையே அகதிகள் ாழ்கிற எல்லைதான்... உலகில் உள்ள அகதிகளுக்கு உடை- .ணவு-இடம் உழைக்காமல் கிடைக்கிறது. ஆனுல் இவர்களுக்கோ புவைகள் உழைத்தால்தான் கிடைக்கிறது!

டெலிவிசன்வந்துவிட்ட காலத்தில் கூட இவர்கள் இன்னமும் பிபரம்தெரியாதவர்களாகத்தான் இருக்கிருர்கள். உலகமே இன்று சாந்தமாக்கிக் கொண்ட கல்வி இவர்களுக்கு மட்டும்ஏன் ந்நியமாகிவிட்டது...நேற்று ஒருசம்பவம்... ஒரு குடும்பத்தை பெயர் கட்டு விபரம்பதிந்தான்.

பேரு...

முனியாண்டி...

வயசு...

நாப்பதுக்கு மேலே இருக்கும்...நாப்பதுக்கு மேலன்னு ரெக்டாய் சொல்லுங்கோ...

கரெக்டா சொல்லுறதுக்கு பொறந்து ஆண்டு தெரியாதுங்கோ... ப்புறம் சிங்காரம் முனியான்டியைப் பார்த்து குத்து மதிப்பில் யதைக்குறித்தான்...

ன்னென்ன எரிஞ்சிபோச்சு... அதுட பெறுமதி நமக்கிட்ட பறுமதியானது எதுவும் இல்லிங்க... ஆனு சிட்டிசன் சிப் கொப்பி ரிஞ்சிபோச்சுங்க...! அதான் கவலைப்படுறேன்...

சிங்காரத்திற்கு முனியான்டியைப் பார்த்தபோது பாவமாக ருந்தது. தன் காம்பராவில் இருந்த பொருட்கள் எரிந்ததற்கு வலைப்படாதவன் அந்த நாட்டு பிரஜையாக்கப்பட்ட வெறும்காகிதம் ரிந்ததற்கு அழுகிருனே! ஓ... வெறும் காகிதம் அது? இல்லை!

www.tamilarangam.net

இந்தநாட்டுக்காக உழைத்து வந்த இனத்தை நாடற்றவராக ஆக்கப்பட்டபோது அவர்கள் ஒவ்வொருத்தரும் இந்த நாட்டில் வாழ ஒரு லைசென்ஸ்... அதற்கு பெயர் சிட்டிசன்சிப் அது கிடைக்காதவர்கள்அகதியாக தாயகம் திரும்பவைக்கப்பட்டார்கள்! இரண்டும் கிடைக்காதவர்களா நாடற்றவர் ஆக்கப்பட்டார்கள்..

அன்று கடைசியாக பெயர் விபரத்தை பதிந்துவிட்டு நிமிர்ந்து பார்த்தபோது மாலினிதான் நின்றுகொண்டிருந்தாள். மாலினி பெயர் பதியத்தான் வந்திருக்கிறளோ? சிங்காரம் எதுவும்பேசாமல் அவளைப் பார்த்தான்... அவள் தன் உணர்ச்சிக்கு உருவம் கொடுக்காமல் கண்களால் சாடைகாட்டினுல். கண்கள் கலங்கி வந்தன...

சிங்காரம் அவள் அருகே போய், இங்கெல்லாம் வந்து தொந்தரவுகொடுக்கவேணும்! இப்பநான் ஒரு வேலையை பாரமெடுத்திருக்கறேன்... நீ போயி நம்மதோட்டத்து ஆளுகளோட இரு! நான் இங்க தான் இருக்கிறேன்... என்று சொல்லி விட்டு பதிவேட்டோடு காரியாலயத்திற்குப் போனுன்... மாலினி அழுதுகொண்டே போனுள்...

நாலு நாட்களின் பின்னர் ஒரு நாள் அன்று என்ன நடந்ததோ தெரியவில்லை அகதிகள் லொறிகளில் வந்து குவியத் தொடங்கினுர்கள். சிங்காரத்துக்கு எதுவும் புரியவில்லை. இனக்கலவரம் நின்றுவிட்டது என்று நினைத்தபோது புதிய அகதிகள் வந்து இறங்கிவிட்டார்கள். அந்த மாவட்டத்தின் எல்லையில் இடம்பெற்ற கலவரத்தினுல் பாதிக்கப்பட்ட மக்கள் தான் அவர்கள் அத்தனை பேரும் ரப்பர் மரத்தோட்டத்தைச் சார்ந்த தொழிலாளர்கள்.

சிங்காரத்துக்கு அன்று வேலை அதிகமாகிவிட்டது போல் தெரிகிறது. லொறிகளில் இருந்தவர்களை வரிசையாக நிறுத்தி விபரம் பதிய வைத்தார்கள். அனுமான் வால் போல் வரிசை நின்றிருந்தது. அதில் அதிகமானுேர் கட்டிய துணியோடு வந்திறங்கினுர்கள். இன்னமும் அவர்கள் முகத்தில் பயம் போகவில்லை.

சிங்காரம் வேகமாக விபரங்களைப் பதிந்தான். அவர்கள் அத்தனை பேரினதும் முறைப்பாடு எதனையும் எடுத்துவர முடியவில்லை என்பதுதான். மலையேறி தாக்கமாட்டார்கள் என்ற தைரியத்தில் அவர்கள் எந்த ஏற்பாடும் செய்யாமல் இருந்துவிட்டார்கள்.

நாசமாப் போனவனுக இந்த மாதிரி பன்னிட்டானுகளே! ஒண்ணு திண்னு ஒண்ணுகெடந்து-ஒண்ணு இருந்து இந்த மாதிரி செஞ்சானுகளே!... அந்தக் கூட்டத்தில் இருந்து ஒரு கிழவி ஒப்பாரி வைத்தாள்... சிங்காரம் யாரு? என்று கேட்டான்.பக்கத்து நாட்டுல இருந்த சிங்களவனுக தான்... சிங்காரத்துக்கு மாலினியின் ஞாபகம் தான் வந்தது. இனிமேல் அவளோடு... பகல் இரண்டு மணியிருக்கும் சிங்காரத்துக்கு தூக்கம் வரும் போலிருந்தது... ஆனுலும் அவன் அதனை அடக்கி தன் வேலையை கவனித்தான். இன்னும்

www.tamilarangam.net

கொஞ்சப்பேர்கள்தான் இருந்தார்கள். இரெண்டு லொறி அகதிகளைக் குறிப்பெடுத்துவிட்டான்.
அவன் பெயர்-விபரம் பதிகிறான்.

பேரு... பியதாசா...

சிங்காரத்துக்கு வியப்பாக இருந்தது. மறுபடியும் பெயரைக் கேட்டான் அவன் அதே பெயரைத்தான் சொன்னான். அவனுக்கு புரியவில்லை... பியதாசா... ஒரு சிங்களப் பெயர் ஒரு சிங்களவன் அவன் ஏன் இந்த அகதிமுகாமுக்கு வருகிறான்?

பெயரை பதியாமல் நிமிர்ந்து பார்த்தான் அவன்... அரைகுறை தமிழில் பேசினான். சிங்களவனை நான் ஏன் முகாமுக்கு வந்திருக்கேனு தான் நீங்க பார்க்கிறீங்க! நான்

வேரகம ரப்பர்தோட்டத்தில் தமிழ் ஆள்களோட லயத்தில் இருந்துவேலைசெய்யிரவன்.
நான் கல்யாணம் கட்டியிருக்கிறது ஒரு தோட்டத் தமிழ்ப் பொம்பள... பேரு லச்சுமி...

சிங்காரத்துக்கு பொட்டில் அடித்தது போலிருந்தது. பியதாசாவுக்குப் பக்கத்தில் லச்சுமி நின்று கொண்டிருந்தாள். சிங்களப் பெண்ணை மணந்தவர்களும் தமிழ்ப் பெண்ணை மணந்தவர்களும் அகதிகளாக வந்திருக்கிறார்கள். கலப்புத் திருமணத்தால் தேசியத்தை உருவாக்கலாம் என்று சொன்னவர்கள் எங்கே?

"நல்ல தாய்-தகப்பனுக்கு பொறந்தவனுக இந்த அநியாயம் செய்ய மாட்டானுக! ஆனா இவனுக என்னத்தைப்பண்ணினாலும் எங்க ரெண்டுபேரையும் பிரிக்க முடியாது!" என்ற பியதாசா லச்சுமியைப் பார்த்தான். இருண்டிருக்கிற அவள் முகத்தில் ஒரு பிரகாசம்.

எங்கே அழைத்துச் செல்வது போன்ற ஒரு உணர்வு அவனுக்கு. பியதாசாவை ஏறிட்டுப்பார்க்கத் தயங்கினான். தமிழர்களை அடிக்கிற சிங்களவர்கள் மத்தியில் இந்த பியதாசா ஒருமனிதன். அதற்கு மேல் ஒரு மகாத்மா.

அவனுடைய நிழலில் கூட நிற்கக் கூட தனக்கு தகுதியில்லை என்ற நினைப்பு அவனுக்கு... தன்னை மன்னிக்கக் கோருவது அவன் கண்களைப் பார்த்தான்...

அன்று இரவு நாலு பேர் சுற்றிவர இருந்தும் அதைப் பெரிது படுத்தாது சிங்காரம் மாலினியின் கண்ணீர்த் துளிகளைத் துடைத்து விட்டு அவளை அப்படியே கட்டிப்பிடித்துக்கொண்டான்.

-மாலினிக்கு எதுவுமே புரியவில்லை.

நன்றி கொழுந்து

www.tamilarangam.net

## அட்டைப்படவிளக்கம்

தனிமனிதன் தவறுகளைத்
தண்டிக்கும் அதிகாரங்கள்.
ஜனநாயக மரபு மீறி
வளர்ந்துவந்த "அவதாரங்கள்"
சமூகப் பிரளயங்களில்
இந்த மனோபாவங்களின்
வெளிப்பாடுகளில் சிக்கித்
தத்தளிக்கும் மானிடம்

போரென்று வரும்போது
மனிதம் கவசங்களாய் -
வாழ்வென்று வரும்போதோ
அதுவே கனைகளாய் -

யாரிதைக் கேட்பது,
யாரிடம் சொல்வது
வலிவும் முரட்டுத்தனமும்
இருப்பைத் தகர்க்கும்போது....?

தடியெடுத்தவன் பார்த்துக்கொள்ளட்டும்
அல்லது
தடியோடு அழியட்டும்....
கடல்கடந்து தப்பித்தோம் -
கையைத்தட்டிவிட்டுப் போய்விடலாம்.
மீண்டும் அழிவுக்குள்
மரணிக்கும் மானிடம்.
வெளிநாட்டுக் காற்றுக்கும்
வீரியமில்லை
இங்கும் அதே "அவதாரங்கள்"

www.tamilarangam.net

# தொலைக் காட்சி ஒரு நோக்கு

**வீ**ட்டில் இருந்து வந்த எனது சகோதாரியின் பூ மணச்சடங்கின் வீடியோ பிரதியை பார்த்தபொழுது பெரிதும் ஆச்சரிய ப்பட்டேன். அதில எனது அம்மம்மா சிரித்த முகத்துடன் பல தடவைகள் காணக் சுடியதாக இருசதது. ஒரு காலத்தில் படம் எடுப்பதற்கே அனுமதிக்கமாட்டா, படம் எடுத்தால ஆயுள் குறையும் எனபது அவர்களது அபிப்பிராயம். காலம் இன்று மாறிவிட்டது. எனினும் இவர்களது காலத்தில தான் முதல தொலைக்காட்சி 1928க்கும் 1935க்கும் உட்பட்ட காலப்பகுதியில இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோன் லோகி (JOHN LOGIE) எனபவரால B.B.C. உதவியுடன் காட்டப்பட்டது. முதல வர்ணத் தொலைக்காட்சிச் சேவை அமெரிக்காவில ஆரம்பிக்கப் பட்டது. வீடியோ, டிஸ்க் பற்றிய ஆராய்ச்சிகள் 60களில முதன் முதலாக RCA, PHILLIPS-MCA என்ற நிறுவனங்களால வெற்றி கரமாக நடத்தப்பட்டன.

ஒலியில இருந்து ஒளிக்கு மாற்றப்பட்ட அந்த கால கட்டத்தில, நாங்கள் பயன் பெறப் போவதாக மக்கள் மத்தியில ஓர் நம்பிக்கை இருந்தது. மக்கள் பெற்ற நன்மைகள்தான் என்ன?

நதன்

ரொரன்டோவில உள்ள "மெயின் சப் வேக்கு அருகாமையில உள்ள ஓர் மருந்துக் கடையில ஒருவர் கத்தியைக் காட்டி பணம், பொருள் என்பனவற்றை அபகரித்து சென்றுவிட்டார். இதனை அங்குள்ள CLOSED CIRCUIT T.V. CAMERA படம் பிடித்துவிட்டது. அன்று சகல தொலைக்காட்சி அலைவரிசைகளின் செய்திகளில காட்டப்பட்டு, குற்றவாளிகளை பிடித்து தருமாறு மக்கள் கேட்கப்பட்டனர். ஒரு சில நாட்களின் பின்னர் குற்றவாளிகள் பிடிக்கப்பட்டனர்.

இன்று கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூக சேவைகள் போன்ற சகல துறைகளிலும் இதன் பங்கு அளப்பாரியது. விஞ்ஞானிகள் குழந்தைகளின் அசைவுகளை நோட்டமிட்டு அவர்களது முன்னேற்றத்திற்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழிவகை செய்கிறார்கள். ஒலிம்பிக் போன்ற பிரபலய விளையாட்டுகளில் சில சமயங்களில் யார் முதலாக வந்தது என்பதை தொலைக்காட்சி மூலம் முடிவு செய்கிறார்கள்.

அண்மையில் விடுதலை செய்யப்பட்ட "நெல்சன் மண்டேலாவின் "விடுதலை நிகழச்சி உலகெங்கும் தொலைக்காட்சி மூலம் நேரடியாக ஒளிபரப்பபட்டது. மண்டேலாவிற்கு எவ்வளவு ஆதரவு இருந்தது என்பதை அறிந்த உலக மக்களால் தென்னாபிரிக்காவில் கறுப்பர்களின் விடுதலைப் போராட்டத்தையோ வெள்ளையர்களின் இன வெறியையோ, மண்டேலா சிறையிலபட்ட சித்திரவதைகளையோ காணமுடியவில்லை. உண்மையிலே, சகல அரசுகளும் அதிலும் முக்கியமாக வல்லரசுகள் தமக்கு சார்பான நிகழச்சிகளையே மக்களுக்கு ஒளிபரப்புகிறார்கள். **மறுபக்க செய்திகள் எப்பொழுதும் இருட்டடிக்கப்படுகின்றன.** மக்கள் சிந்தனை ரீதியாக மாறிவிடுவார்களோ என்ற அச்சம்தான். அமெரிக்காவில் மியாமியில நடந்த நடைபெற்ற இனவெறியாட்டங்களை அமெரிக்க மக்கள் காண முடியாமல இருந்தது என்பது எவ்வளவு தூரத்திற்கு செய்திகள் இருட்டடிக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. கிழக்கு ஐரோப்பாவில் நடைபெற்ற அரசியல மாற்றங்கள் என்பன வேறு சில உதாரணங்கள்.

இந்திய சுதந்திரப் போரில வெள்ளையர் செய்த அட்டகாசங்கள் "காந்தி" படம் மூலம் வெளிக் கொணரப்பட்ட பொழுது காந்தி படத்தை பெரும்பாலான வெள்ளையர்கள் தமது மூதாதையரின் சித்திவரதைகளையிட்டும், தமது மூதாதையரின் நாடு பிடிக்கும் ஆசையையிட்டு வெட்கித் தலை குனிந்தனர். இச்சம்பவங்கள் உடனுக்குடன் காட்டப்பட்டிருப்பின் இந்திய சுதந்திரப் போர் திசை மாறி இருக்கலாம்?

இந்திய இராணுவம் இலங்கையில் செய்யும் அட்டகாசங்கள் உடனுக்குடன் இந்திய மக்களுக்கு காட்டப் பட்டிருந்தால் இந்திய இராணுவம் மீண்டும் இந்தியாவுக்குள் நுழைய மக்கள் விடுவார்களா என்பது கேள்விக் குறி. குறிப்பாக ஏகாதிபத்திய வல்லரசுகளின் அந்நிய ஆக்கிரமிப்புக்களை அந் நாட்டுமக்கள் ஏற்பார்களா? பத்திரிகையில இருந்து தொலைக்காட்சி வரை செய்தி இருட்டடிப்பு மாறவில்லை.

பலஸ்தீனிய மக்களுக்கு எதிராக இஸ்ரேலால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதங்கள் தொலைக்காட்சி மூலம் பதிவு

**குற்றமே தமது மகுடமாக் கொண்டோர்**
**மற்றை மனிதரை அடிமைப் படுத்தலே**
**முற்றிய அறிவின் முறையென்று எண்ணுவர்.**
**- பாரதியார்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யப்பட்டு அகதிகள் முகாம்களில காட்டப்பட்டன. இதன் பின்னர் ஏராளமான பலஸ்தினிய சிறுவர்கள் இஸ்ரவேலுக்கு எதிரான போராட்டங்களில் பங்குபற்றியதை காணக்கூடியதாக இருந்தது.

எமது தாயகப் போராட்டத்திலும் குறிப்பாக பொலிஸ் நிலையங்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொலைக்காட்சிமூலம் மக்களுக்கு காட்டப்பட்டது. இதன் பலன்கள் மக்கள் அறிந்ததே!

எலசலவடோரில அரசுக் கெதிரான போராட்டங்கள் யாவும் வீடியோ மூலம் அரசால பதிவு செய்யப்பட்டு பின்னர், குறிப்பாக இதில் பங்கு பற்றிய முக்கியஸ்தாகள் அரசால சுட்டுக் கொலலப்பட்டுள்ளார்கள். எவ்வளவ, பிற்போக்குத்தனமாக வீடியோவை பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு இதுவ,ம் ஒரு உதாரணமாகும்.

விளம்பரத் துறையில தொலைக்காட்சிச் சேவை மக்களை ஏமாற்றுவதில மிகவும் சிறப்பாக பணியாற்றுகிறது. ஏராளமான விளம்பரங்கள் உயர் தொழில நுட்பங்கள், என்பனவற்றை பயன்படுத்தி மக்களை மயக்கு வதில வல்லமையுடையதாக உள்ளது. குறிப்பாக காப்புறுதி, ஓய்வு பெறுதலுக்கான சேமிப்புத் திட்டங்கள்", என்பன குறிப்பி டத்தக்கவை. மக்கள் இதன் மூலம் என்னவென்ன நன்மைகள் பெறமுடியாதவையோ அவை பெறமுடியும் என விளம்பரங்கள் மூலம் காட்டப்படுகின்றன.

இந்திய சினிமா ஆதிக்கத்தை இதன் மூலம் உடைக்கலாம் நலல தமிழ் படங்களை தொலைக்காட்சிக்கு எடுப்பதன் மூலம் இந்திய தனிநபர் சினிமா ஆதிக்கத்தை உடைக்கலாம். இன்று குறிப்பாக வீடியோவால் சினிமா பாதிக்கப்படுகிறது எனக் கூறுவோர் திரைப்படத் தயாரிப்பாளர்களும், திரையரங்கு முதலாளிகளுந்தான்.

இன்று வளர்ந்து வரும் கனடா போன்ற நாடுகளில ஒவ்வொரு வீட்டிலும் தொலைக் காட்சிப் பெட்டியை காணக் கூடியதாக உள்ளது. அதே போல தொலைக்காட்சிப் படப்பிடிப்புக் கருவியும் சுமார் $1500 தான். எனவே இதனை எவராலும் வாங்க முடியும். ஆனால வளர்ந்து வரும் எமது நாடுகளில இதன் விலை சராசரி ஒருவரது வருட வருமானமாகும். எனவே, எமது நாடுகளில உண்மையில இதனை அநுபவிப்பவர்கள் மேலமட்டத்தோரே.

எந்த ஒரு விஞ்ஞான வளர்ச்சியும் மக்களோடு தொடர்புற்று இருந்தால தான் அது, தன் முழுமையை அடையும். அதே சமயம் எந்தவொரு விஞ்ஞான வளர்ச்சியையும் வலலரசுகள் தமக்கு சாதகமாக பயன்படுத்துவதால அவை அதன் முழுமையை அடையமுடியாமல போகிறது.

**கண்ணால பார்ப்பதையும் காதால கேட்பதையும் விட மெய்யுணர்ந்து அறிவதே உண்மை.**

www.tamilarangam.net

# அண்டவெளியில் ஒரு தேடல்...

400 ஆண்டுகளுக்கு முன்னர், இத்தாலிய விஞ்ஞானி "கலீலியோ கலீலி" முதன் முதலாக இரவு, வானத்தை நெருங்கிப்பார்க்கத்தக்க ஒரு சிறு தொலைநோக்கியை(ரெலஸ்கோப்) அமைத்தார். வெற்றுக்கண்ணால் நோக்கத்தக்க சுமார் 6000 நட்சத்திரங்களையும் ஒளி தரும் புள்ளிகள் என கருதிவந்த அந்நேரத்தில் கலீலியோவின் தொலைநோக்கி பல உண்மைகளை திறந்துவிட்டது. உதாரணமாக ஜுப்பிட்டரை அதன் சந்திரன்கள் சுற்றி வருவதை கலீலியோ தொலைக்காட்டி காட்டியது. மேலும் வெற்றுக்கண்ணுக்கு இதுவரை தெரியாத பல நட்சத்திரங்கள் அந்த சிறு தொலைநோக்கியின் பயனாக தெரியவந்தன.

## ஏப்ரல் 12. 1990

**அமெரிக்க விண்வெளிக்கப்பலான "டிஸ்கவரி" விண்வெளியை நோக்கி சீறிப்புறப்பட்டது, அதனுள்ளே மனிதனின் பார்வையை விசாலப்படுத்தும் விஞ்ஞானக்கருவி "ஹபில் டெலஸ்கோப்"!**


அதன்பின்வந்த 400 ஆண்டுகளு[ம்] விஞ்ஞானத்தை நன்கு வளர்[த்] தெடுத்தன. விண்வெளியை நெ[ரு] ங்கிப் பார்க்கும் மனிதனி[ன்] முயற்சியின் சமீபத்திய பாரி[ய] விளைபொருள் தான் "ஹபி[ல்] தொலைநோக்கி"!

அமெரிக்க வானியல் ஆராய்ச்[சி] யாளர் "எட்வின். பி. ஹப்பில்["] அவர்களை கௌரவிக்கும[்] முகமாக "ஹபில் தொலைநோக்கி["] என பெயரிடப்பட்ட இந்[த] இராட்சத தொலைநோக்[கி] டிஸ்கவரி விண்வெளிக்கப்பலி[ன்] உதவியுடன் விண்வெளியி[ல்] நிறுத்தப்பட்டுள்ளது. இதுவ[ரை] மனிதனால் உருவாக்கப்பட்[டு] விண்வெளியில் வைக்கப்பட்[ட] அண்டவெளிக் கருவிகளி[ல்] இதுவே மிகப் பெரியதானதாகும்[.] இது பூமியில் தெரிய,ப[ல] அலைநீளத்தில் வரும் ஒளி[க்] கற்றைகளை உணர்ந்து கொள்[வ] துடன் எம்மால் பூமியி[ல்] காணப்படமுடியாத அல்ட்ரா வயலெட், இன்ப்ரா- சிவப்[பு] ஒளிக்கற்றைகளையும் வாங்கி[க்] கொள்ளும். இதில் பொருத்[தப்] பட்டுள்ள நுண் உபகரணங்க[ள்] இதுவரை எம்மால் விண்[] வெளியில் அறியப்பட்[ட] தூரத்தை விட ஏழுமடங்[கு] அதிக தூரத்தை பார்க்[க]

**கிறிஸ்டி[ன்]**

www.tamilarangam.net

"கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு" என்பார்கள் நம்மவர்கள்.
இந்த உலகு ஒரு மண்ணளவு என்றுல்
நாம்வாழும் அண்டவெளி உலகளவு என்பது விஞ்ஞானிகள் முடிவு.
அண்டவெளி பற்றிய அறிவு உலகளவு என்றுல்
அதுபற்றி நாம் இதுவரை அறிந்தது
மண்ணளவுதான்.
தான் அறிந்துகொண்டது மண்ணளவு என்றுதெரிந்து கொண்ட மனிதன்
என்றும் தனது அறிவுத்தேடலை நிறுத்தப்போவதில்லை.
அண்டவெளி அளக்கமுடியாததாக இருக்கலாம், ஆனுல் அதற்காக
அதைப்பற்றி அறியும் ஆவலை
மனிதன் குறைத்துக் கொள்வதாயில்லை.
அறிவினைப்பிரயோகித்து அறியக்கூடியதை அறியத்துடிக்கிறுன் மனிதன் -



வைக்கும். பூமியிலுள்ள எந்த தொலைநோக்கியையும் விட 10 மடங்கு தெளிவாக படம் பிடிக்கும் வல்லமை கொண்ட இது நேரடி பொருட்களை 50 மடங்கு பெரிதாக்கியும் காட்டும்.

1.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் உருவாக்கப்பட்ட இத் தொலைநோக்கி கிரகங்களையும் நட்சத்திரங்களையும் துல்லியமாக படம் பிடித்து பூமிக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது. முதல்நாள் அனுப்பிய படங்களிலேயே விஞ்ஞானிகளை அதிசயப்பட வைத்துவிட்டது இத் தொலைநோக்கி! இதுவரை காலமும் விஞ்ஞானிகளால் ஒரு நட்சத்திரம் கருதப்பட்ட நட்சத்திரமானது இரண்டு நட்சத்திரங்களின் ஒளிச் சேர்க்கையே

www.tamilarangam.net

என்பதனை ஹபில் அனுப்பிய முதல் நாள் படத்தின் மூலம் கண்டு அதிசயித்தனர் விஞ்ஞானிகள்.

பூமிபோன்ற வேறு கிரகங்கள் அண்டவெளியில் உள்ளனவா என்பது விஞ்ஞானிகளை அரிக்கும் இன்னோர் கேள்வி. இதற்கு ஹபில் தொலை நோக்கி பேருதவி புரியும் என்று எதிர்பார்க்கிறார்கள். எமக்கு அருகேயுள்ளதாக கருதப்படும் நட்சத்திரங்களே கோடிக் கணக்கான மைல் தூரத்திற்கு அப்பாலிருப்பவை. மிக நெருக்கமான நட்சத்திரமான அல்பா சென்ராரி சூரியனிலிருந்து 38 மில்லியன் கிலோமீட்டர் தூரத்திலிருக்கிறது. அடுத்து இந் நட்சத்திரத்திற்கு அமைந்துள்ள கிரகக்கூட்டங்களை ஹபில் மூலம் ஆராயவிருக்கிறார்கள்.

மொத்தத்தில் ஹபில் தொலைநோக்கி பல கேள்விக்கு பதிலளிக்கப் போகிறது என்பதைவிட இன்னும் எத்தனை கேள்விகள் நமக்கு தெரியாதிருக்கிறது என்பதை தெரியவைக்கப்போகிறது.....!

இந்த "தேடல்" இதழ் தவிர்க்க முடியாத பல காரணங்களால் மிகுந்த தாமதமாக வெளிவருகிறது. இதையிட்டு வாசகர்கள் அனைவர்களிடமும் மன்னிப்புக் கோருகிறோம். எதிர்வரும் இதழ்கள் வழமைபோல் வெளிவரும்.

**வெளியீடு**
**கலை இலக்கிய மன்றம்**
**கனடா**

தேடல்

பின் அட்டை கவிதை - 'புதிய பூபாளம்': **குலன்**

முன் அட்டை, உள் அட்டை படம் : **GEO**

பின் அட்டை புகைப்படம் : **சாரதா**

அச்சிட்டோர்: **அமலா அச்சகம்**, மொன்ரியால்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலை இலக்கிய மன்றத்தின் அனுசரணையுடன்

## தேடகம் (நூலகம்)

இலங்கை,இந்தியாவில் இருந்து தமிழ்,ஆங்கில
பத்திரிகைகள,சஞ்சிகைகள் தருவிக்கப்படுகின்றன.

5497 A,விக்டோரியா அவனியு
அறை இல :222
மொன்றியால்

வகைதுறை வள நிலையம்
566,பாராளுமன்ற வீதி
ரொறன்ரோ

---

தேடல் பற்றிய சகல தொடர்புகளுக்கும்

**தேடல்**

**THEDAL**
**P.O.BOX 1031**
**Station "F"**
**Toronto,M4Y 2T7**
**Ont,CANADA**

**தேடல்**

---


வார இதழ்

**தாயகம்**

'உண்மையைத் தேடி'

இது ஒரு ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவன வெளியீடு

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்